REGD M. 4642.

சந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
„ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 12-6-49 | இதழ் 50

★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—8

எஸ். வி. லிங்கம்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில், "தமிழன்பர்கள் மாநாடு" என்று ஓர் மாநாடு நடைபெற்றது. இது, 'இந்து', 'சுதேசமித்ரன்' சீனுவாசன்களாலும், வெங்கட்டராம சாத்திரிகளாலும் நடத்தப்பட்டது. இதன் மூலபுருடராகக் 'கல்கி' ஆசிரியர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி விளங்கினர்.

பள்ளிக்கூடங்களிலுள்ள பாடபுத்தகங்களைச் சிபார்சு செய்யும் குழுவினரைப் பெரியசாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தங்கள் பக்கம் திருப்பிய பின்பு, பள்ளிக்கூடப் புத்தகங்களை விற்கும் கம்பெனிகளையும் தாமே நடத்த வேண்டுமென்று அவர்கள் எண்ணினர்கள்.

புத்தகங்களை வெளியிட்டு விற்பனை செய்யும் கம்பெனிகளில், தங்கள் ஆதிக்கத்தை வளர்ப்பதற்காகவே இம்மாநாடு கூட்டப்படுகிறதென்று அழகர்சாமி எண்ணினர். இதுபற்றி நமது கட்சி எந்தவிதமான தீர்மானத்துக்கும் வராவிட்டாலும், இப்படிப்பட்ட சமயங்களில் எல்லாம், கட்சி செய்யவேண்டிய சில முக்கியமான காரியங்களை எல்லாம் கட்சித் தோழர்களே செய்து முடிப்பது அக்கால வழக்கம்.

இந்த மாநாட்டு முயற்சியில் கவர்னர் பெயரும், சில இராசாக்கள் பெயர்களும் அடிபட்டதுடன், தமிழ்க் 'கலர்' வேறு சேர்க்கப்பட்டிருந்ததால், மிகவும் தடபுடலாக இருந்தது. இதனைத் தொடக்கியவர்கள் யாவரும் காரியங்களைப் புத்திசாலித்தனமாகவே நடத்தினர்கள். மாநாட்டுக்குக் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் எல்லாம், முன்னதாகவே கொண்டுவரப்படவேண்டுமென்றும், ஆலோசனைக்குரிய தீர்மானங்கள் யாவும் அச்சிட்டு, நகல் காப்பிகள் முன்னதாகவே வெளியிடப்படுமென்றும்சொன்னர்கள்.

மாநாட்டுப் பெயர் 'தமிழன்பர்' என்றிருப்பதாலும், தலைவர் திறப்பாளராக மந்திரி குமாரசாமி அவர்களும், இராசா அண்ணாமலைச்செட்டியார் அவர்களும் இருப்பதாலும் தமிழ்வளர்ச்சி ஒழுங்காக இருக்கும் என்பதே அவர்களுடைய எண்ணம். இது அழகர்சாமிக்குக் கோபத்தையே உண்டாக்கிற்று.

அழகர்சாமி சென்னைக்குச் சென்று, நண்பர்கள், விரோதிகள் ஆகிய அனைவரையும்கண்டு, இந்த மாநாட்டை நடத்தவே விடக்கூடாதென்று விவாதம் செய்தார். கட்சியில் பொதுவான அபிப்பிராயபேதமும், சொந்தக்கருத்து மாறுபாடும் கொண்டு விலகியிருந்த எல்லாத் தமிழர்களையும் அழகர்சாமி ஒன்று சேரும்படி செய்தார். இதனைக் கண்டு மயிலாப்பூர் கலங்கிற்று. இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்குச் செலவுக்குப் பணம் வேண்டுமல்லவா! அன்று, இன்று போல் சற்றுத் தாராளமாகப் பணநடமாட்டம் ஊரிலேயே இல்லாத காலமாகும். ஆதலால் அதற்காகக் கைமுதல் உண்டாக்கிக் கொண்டார்.

"நாத்திகமாநாடு" ஒன்று சென்னையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி வசூல்செய்யப்பட்ட பணம், "தமிழன்பர் மாநாடு" எதிர்ப்பு வேலைக்குச் செலவுசெய்யப்பட்டு வந்தது.

'தமிழன்பர் மாநாட்டு'வரவேற்புக் குழுவினர் பேருக்கு அனுப்பவேண்டிய தீர்மானங்களைத் தயாரித்து, பதிவுத் தபாலில் அனுப்பிப், பற்றுச்சீட்டு வாங்கிவைத்துக்கொள்ளும் பொறுப்பைத் தோழர் குருசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டார். மாநாட்டுக்கு டிக்கெட் வாங்கிக்

கொள்ள முடியாதவர்களுக்குத் தனியாகப் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பையும், பண வசதியுள்ளவர்களுக்கும் டிக்கெட் வாங்கிக்கொடுக்கும் பொறுப்பையும் தோழர் பொன்னம்பலனார் ஏற்றுக்கொண்டார். இந்தப் 'போர் முறைகள்' யாவும் பெரிதும் "தமிழரசு" மாசிலாமணியார் வீட்டிலேயே செய்யப்பட்டன. இவைகளைக்கேள்விப்பட்ட மயிலாப்பூர்கள் கோபப்பட்டன. சுயமரியாதைக்காரர்களை அடக்குவதற்கெனப் பிரத்தியேகப் போலீஸ் ஏற்பாட்டுடன் மாநாடு தொடக்கப்பட்டது.

மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளில் மூன்றுபங்கு அவர்களும், ஒருபங்கு நாங்களுமாக இருந்தோம். மாநாட்டில் சுயமரியாதைக்காரர்கள்முட்டை வீசப் போகிறார்கள்—கலகம் செய்யப் போகிறார்கள் என்று அவர்கள் போலீசுக்குத் தெரிவித்திருந்தார்கள். அன்பர் மாநாட்டு முக்கியஸ்தர்கள் மேடைக்கு வந்தார்கள். மேடையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் எல்லாம் 'வரவேற்புப் பிரதிநிதிகள் மட்டும்' என்று எழுதி ஒட்டப்பட்டிருந்தது. நம்மைச் சார்ந்த வரவேற்புப் பிரதிநிதிகள் யாவரும் அந்த நாற்காலிகளில் உட்கார்ந்து விட்டனர். மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் ஆகிய இருவருக்கும்இரண்டுசோபாக்களும், அதைச் சுற்றி ஆறு சோபாக்களும் போடப்பட்டிருந்தன. நமது வரவேற்புப் பிரதிநிதிகள் சிலருக்கு வேறு இடம் இல்லாததால் அந்த ஆறு சோபாக்களிலும் ஆறுபேர்உட்கார்ந்துகொண்டார்கள். தோழர்கள் வெங்கட்டராம சாத்திரி, சீனுவாச சாத்திரி, 'சுதேசமித்ரன்' சீனுவாசன், சத்தியமூர்த்தி, அப்புச் சாத்திரி ஆகியவர்களுக்காக அந்தச் சோபாக்கள் போடப்பட்டிருந்தனவாம். அந்தச் சோபாக்களில் டி. வி. சுப்பிரமணியம்,பார்த்தசாரதி நடேசன், ஜீவானந்தம், என். தண்டபாணி ஆகியவர்கள் உட்கார்ந்துகொண்டார்கள். நமது கட்சி வரவேற்புப் பிரதிநிதிகளில் எஸ். இராமநாதன், தாவுத்ஷா, மாசிலாமணி, அழகர்சாமி ஆகியவர்கள், உட்கார்வதற்கு நாற்காலிகள் இல்லாத காரணத்தால்நின்றுகொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். ஆனால், புகை எப்படி மூளுகிறதென்பதை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

முதலில் எதிர்பார்த்தபடி கலகம் இல்லாததாலும், உட்கார இடமில்லாது போனதைப் பெரிது படுத்தி வம்பு வளர்க்க அவர்கள் விரும்பாததாலும், உட்கார்ந்து இருப்பவர்களும் அதற்குப் பயந்த ஆட்களாக இல்லாததாலும் மாநாட்டு ஆரம்ப விழாத் தொடங்கியது. செட்டி நாட்டரசர் தமது திறப்பு விழாவை மங்களகரமாகச் செய்து முடித்தார். அடுத்தபடியாக மாநாட்டுத் தலைவர் மந்திரி குமாரசாமி அவர்கள் பெயரை வெங்கட்ராம சாத்திரியார் முன் மொழிந்தார். சீனுவாச சாத்திரி, சத்தியமூர்த்தி முதலியவர்கள் வழிமொழிந்தார்கள். உடனே சுப்பிரமணியம் எழுந்து, மாநாட்டுத் தலைவர் பெயரைத் தாம் ஆட்சேபிப்பதாகவும், மாநாட்டுப் பிரதிநிதிகள் விரும்பும் வேறோர் தலைவரை இப்போது தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆகவே குமாரசாமி அவர்கள் பெயரைத் தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் கூறினார். உடனே பார்த்தசாரதி எழுந்து, சுப்பிரமணியம் கொண்டுவந்த தீர்மானத்தைத் தாம் ஆதரிப்பதாகவும், பிரதிநிதிகள்விரும்பும் வேறோர் தலைவரை இனித்தேர்ந்தெடுப்பதே முறையென்றும் சொன்னார். பின்னர் சத்தியமூர்த்தி எழுந்து சிறிது நேரம் பேசியதும், சீனுவாச சாத்திரியார் எழுந்து, மாநாட்டுத் தலைவர் தேர்வை எதிர்ப்பது சரியல்லவென்றும், இது எங்கும் நடக்காத புதுவழக்கமென்றும், தான் உலகம் முழுவதும் சுற்றியவர் என்றும், இப்படிச் செய்வது பார்லிமெண்டரி முறைக்கு முரணானதென்றும் பேசினார். இதற்கடுத்தபடியாக இராமநாதன், தாவுத்ஷா ஆகிய நம் ஆதரவாளர்கள் பேசியதும், சுப்பிரமணியம் எழுந்து, மாநாட்டுத் தலைவர் பெயரையே பிரதிநிதிகள் கூடிய மாநாடும் ஒப்புக்கொள்ள மறுப்பது பார்லிமெண்டரி முறைக்கு விரோதம் என்று வேறு யாராவது சொன்னாலும், சாத்திரிகள் இவ்விதம் சொல்வதைக்கண்டு தாம் வருந்துவதாகவும், மாநாட்டின் பெயரைப் பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ளாமல், புதுத்தலைவரை, டில்லி, பாம்பே, கல்கத்தா முதலிய இடங்களில் கூடிய இன்னின்ன மாநாடுகள் மாற்றியிருக்கின்றனவென்றும், அ. இ. கிருத்தவர் மாநாடு சென்னையில்கூடித் தலைவரை மாற்றி இருக்கிறதென்றும், அதாவது, மாநாடு கூடுவதற்குமுன், தலைவர் மீது பிரதிநிதிகளுக்குச் சந்தேகம் தோன்றினால் அந்தத்தலைவரைமாற்றுவதைத்தவிர, வேறுவழியில்லையென்றும், எனவே அப்படியே மாற்றிப் புதுத் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமெனவும்கூறி, இப்போது இங்கு தலைவராய்இருப்பவரைத்தாங்கள் எதிர்ப்பதாகவும், வேண்டுமானால் 'ஓட்' எடுத்துப் பார்க்கலாம் என்றும் பேசினார்.

மாநாட்டில் அவர்கள் பேசும்போது எந்தவிதமான குதுகலமும் இல்லாமல் இருப்பதையும், நமது தோழர்கள் பேசும்போது ஏற்படும் கைதட்டலையும், குதூகலத்தையும் கண்ட தலைவர்கள், 'ஓட்' எடுக்கப் பயந்துகொண்டு, செட்டி நாட்டரசரும், குமாரசாமி அவர்களும் எங்கள் கட்சிக்காரர்களைத் தனியாக அழைத்துப் பேசினார்கள். மாநாட்டு வரவேற்புக் குழுவினர், தங்கள் தீர்மானங்களை, அச்சிட்ட புத்தகத்தில் சேர்க்கவில்லை யென்றும், தீர்மானங்கள் அனுப்பியதற்குப் பற்றுச்சீட்டு இருக்கிறதென்றும், தமிழன்பர் என்ற பேரால், தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றுவதற்கு உடந்தையாக இருக்க முடியாதென்றும், இதற்குத் தலைவர் உடந்தையாக இருப்பதாலேயே எதிர்ப்பதாகவும் நமது தோழர்கள் சொன்னார்கள். பின்னர் சாத்திரிகளோடு கலந்து பேசிச், சட்டப்படி குற்றம் அவர்கள் மீதுதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இனி, மேற்கொண்டு செய்ய வேண்டியதென்ன என்று பேசப்பட்டபொழுது, விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பரிசிலனை செய்யப்படும் தீர்மானங்கள் மாநாட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், கமிட்டியில் பாதிப் பேர் நமது கட்சியைச் சேர்ந்தவர்கள் இருப்பதற்கு இசையவேண்டுமென்றும் அழகர்சாமி கேட்டுக்கொண்டார். இது ஒப்புக்கொள்ளப்பட்டதும், மாநாடு மீண்டும் தொடங்கியது.

சோபாக்களில் இடம் பிடித்து வைத்திருந்த நமது தோழர்கள், முதலில் உட்காரத் திட்டமிட்

டிருந்த பெரிய மனிதர்களுக்கு இடம் கொடுத்து உட்காரச்சொல்லி இடமளித்ததும், நமது தலைவர்கள், குமாரசாமி அவர்கள் பெயரைத் தலைமைப் பதவிக்குப் பிரேரேபணை செய்ய, அவர்களின் ஆட்கள் ஆமோதிக்கத், தலைவர் தம்முடைய இடத்தில் உட்கார்ந்தார். மேடையில் வீற்றிருந்த சோபா முகங்கள் சிரித்த முகங்களாக மாறிப் பகல் உணவுக்குக் கலைந்து சென்றன.

மாலையில் இரண்டு கட்சித் தலைவர்களும் கூடித் தீர்மானங்களின் பேரில் விவாதம் நடத்தி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

தமிழ் எழுத்துக்களை 'விடுதலை'யில் கையாளப்பட்டு வரும் முறையில் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்பது போன்ற முக்கியதீர்மானங்களுக்குப் பின், 'தெய்வம்' பற்றிய ஓர் தீர்மானம் வந்தது. இதை அவர்கள் எதிர்த்தார்கள். கடைசியாகத் தலைவர் 'ஓட்' எடுக்க எண்ணினார். உடனே அழகர்சாமி ஒரு சீட்டு எழுதிச் சுப்பிரமணியத்தின் மூலம் தலைவருக்கு அனுப்பினார். தலைவர் சிரித்துக்கொண்டே, 'ஓட்' எடுக்காமல், தான் தலைவர் என்ற முறையில் அந்தத் தீர்மானத்தைத் தள்ளிவிடுவதாக, அதாவது மயிலாப்பூருக்குச் சாதகமாகச் செய்துவிட்டார். இது அவர்கள் எல்லாருக்கும் அளவுகடந்த மகிழ்ச்சி, அதாவது 'ப்ரம்மானந்த'மாக இருந்தது. ஆனால் ஏன் இப்படி நடந்ததென்ற இரகசியம் அவர்களில் எவருக்குமே தெரியாது. தெரிந்திருந்தால் வேறு விதமாக இருந்திருக்கும்.

மாநாட்டில் பலர் பேசினார்கள். வெங்கட்டராம சாத்திரியார் எழுந்து, "நண்பர்களே! மாநாடு இனிது முடிந்தது. இந்தப் பெருமை யாவும் சுயமரியாதைக்காரர்களையே சாரும். உங்களில் பலருக்கு, ஈரோடு திரு. இராமசாமி நாயக்கரும் நானும், நெருங்கிய சினேகிதர்கள் என்பது தெரியாது. உங்களைப்பற்றிச் சொன்னவர்கள் தப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகக் கோபித்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் யாவரும் "பூல்ஸ்" "ரோக்ஸ்" என்றே எங்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. இந்த இரண்டுநாள் நடவடிக்கைகளில், உங்கள் ஒவ்வொருவரின் பேச்சையும். விவாதமுறையையும் நான் கவனித்தேன், 'பூல்சு'ம், 'ரோக்சு'ம், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்தால் மாநாடு இவ்வளவு சிறப்பாக நடந்திருக்கமுடியாது. தப்பெண்ணங்களைமறந்து, இனிமாநாட்டுத்தீர்மானங்களை நிறைவேற்றிவைப்பதில் ஒன்றுபடுவோம்" என்பதாக மிகவும் பெருந்தன்மையாகப் பேசினார்.

இந்த வெற்றியில் அழகர்சாமி, குருசாமி, குஞ்சிதம் அம்மையார், ஜீவானந்தம், ஆகியோருக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த நிலையில் 'கல்கி' ஆசிரியர் எழுந்தார். பாவம், அவருடைய அடிப்படைத்திட்டம் மிகவும் சாமார்த்தியமாகத் தகர்க்கப்பட்டதால், "மாநாடு முடிந்துவிட்டது. இனி யாரையும் கேட்காமலேயே நான் பேசலாம். மாநாட்டுப் போக்குத்தான் சுயமரியாதைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லையே! பின்ஏன் இங்கு வந்தார்கள்? இவர்களை யார் பாக்கு வைத்து அழைத்தார்கள்? தேச விடுதலைக்காகப் போராடும் காலத்தில் வெள்ளைக்காரரின் தாசர்களாக இருந்துகொண்டிருக்கும் இவர்கள் ...." என்றுஎன்னென்னவோ கூறி நம்மைத்தாக்கிப் பேசினார். இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த என்னை என் கழுத்தைப்பிடித்துத் தூக்கி, ஒலிபெருக்கியின்முன் நிறுத்தினார் ஒருவர். யார் என்று திரும்பிப்பார்த்தேன். அழகர்சாமிதான் அவ்விதம் செய்தவர். அவர் என்னைப் பேசும்படி சொன்னார். எனக்குப் பயமாக இருந்தது. என்ற போதிலும்தைரியமாக,

"தோழர்களே! இந்த மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்ட சீனுவாச சாத்திரி, வெங்கட்டராம சாத்திரி, ஆகியவர்களுக்கு வரவேற்புக் கழகத்

(7-ம் பக்கம் பார்க்க)

ஒரு காலிநாற்காலி

14-ம் பக்கத் தொடர்ச்சி

சுந்தரம் வெளியே வந்தார். சூடாமணி மேடையில் தோன்றவேண்டிய நேரம் வந்தது, சுந்தரம்பிள்ளையை விட்டு நகரமுடியாமல் சூடாமணி நின்றுகொண்டிருந்தாள். தன் கைகளை விடுவித்துக்கொண்டு அவளை மேடைக்குள் தள்ளிவிட்டார் சுந்தரம். சூடாமணி மேடையில் தோன்றியதும் மக்கள் கைகொட்டி ஆரவாரித்தார்கள். சுந்தரமும் கைகளை எடுத்தார். பின்னால் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரர்கள் கைகளைப் பற்றிக்கொண்டனர்.

நாடகசபை வெற்றிகரமாக நடைபெறுகிறது. வாடாத மலராக மங்காத மணியாகச் சூடாமணி திகழ்கிறாள். அவளுடைய நடிப்பைக்காண மக்கள் குவிந்த வண்ணமிருக்கின்றனர். நாடக ஆரம்பம்வரை கூச்சலும் சந்தடியும் இருக்கும். நாடக மணி அடித்ததும் எல்லாம் அடங்கிவிடும். "நாடகம் ஆரம்பிக்கப்போகிறது" என்று மகிழ்வார்கள்.

தூரத்தில் சிறைச்சாலையில் இரவு மணி அடிக்கும். கைதிகளெல்லாம் தங்கள் அறைகளில் சேர்ந்து உட்கார்ந்திருப்பார்கள். கைதி சுந்தரம். மட்டும் இந்நேரம் நாடக ஆரம்ப மணி அடித்திருக்கும், சூடா வேடமணிந்து கொண்டிருப்பாள், நாடகம் நடைபெறும்" என்றுசிறைக் கம்பிகளைக் கைகளால் பற்றிக் கொண்டு நீலவானையும் அதில் விளங்கிடும் ஒளிநட்சத்திரங்களையும் பார்த்தபடி மகிழ்வார்.

நாடகம் பார்ப்பதற்குக் கொட்டகையில் எவ்வளவுதான் கூட்டம் நிறைந்தபோதும், "பெரியமனிதர், வேண்டியவர், அவசியம் ஒரு இடம் கொடுத்தாகவேண்டும்" என்றுதட்டமுடியாத சந்தர்ப்பங்கள் வந்தாலும் இரண்டாவது வரிசையிலிருந்த முதல் நாற்காலியில் யாருமே உட்கார அனுமதிக்கப்படுவதில்லை. அதில் "ரிசர்வ்டு" என்ற அட்டை தொங்குகிறது. சூடாமணி மேடைக்குள் அடியெடுத்து வைக்குமுன் ஒரு கணம் தாமதிப்பாள். அவள்கண்கள் இரண்டாவதுவரிசைக்குச்செல்லும். அங்குள்ள காலி நாற்காலியைக் காண்பாள். அந்தக்காலிஇடம்அவள் கண்களில் சோகத்தைக்கிளறும். பெருமூச்சை அடக்கிக்கொண்டு மேடையினுள் நுழைவாள். கூடியிருந்த மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்பார்கள். ஆரவாரத்தால்நிரம்பியிருந்த மற்றெல்லாஇடங்களைக் காட்டிலும் அமைதியுடன் காத்திருக்கும் அந்த ஒரு காலி நாற்காலிதான் அவளுடைய கவனத்தையும் மதிப்பையும் அதிகம் கவர்ந்திருந்தது.

*

சிறு கதை

★ ஒரு காலி நாற்காலி ★

இரா. செழியன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காலையில் எழுந்ததும் சுந்தரம் பிள்ளை, "சூடா, பாடத்தை எடுத்துக்கொண்டுவா," என்று கூப்பிடுவார். "இதோ! வந்துவிட்டேன் அப்பா," என்று சூடாமணி ஓடிவருவாள். பாடம் நடக்கும். நடிப்புச் சொல்லித் தருவதில் சுந்தரம்பிள்ளை கெட்டிக்காரராயிருந்தார். "தட தடவென்று கொட்டியளந்துவிடாதே. வர வரக் குரல் உயர்ந்து, இந்த இடத்தில் சற்று ஓய்வு கொடுத்து மீண்டும் பேச்சைத் தொடங்கவேண்டும்."

"சரியில்லை, சூடா, யாருடனாவது பேசிக்கொண்டிருந்தால் எடுத்தவுடனேயா கோபித்துக்கொள்கிறாய். புன்னகையுடன் ஆரம்பித்து, அலட்சியத்தைக் காட்டியபின் பேச்சு முடியும்போதுதான், கோபக்குரல் வரவேண்டும். அதற்காக ஏன் இவ்வளவு கூச்சல் போடுகிறாய்? நிறுத்து—மெதுவாகப்பேசு!" இப்படி ஒவ்வொரு பேச்சையும் சுந்தரம் திருத்திக் காட்டினார்.

"உரக்கப்பேசாவிட்டால், நாடகம் பார்க்க வருபவர்களுக்கு எப்படிக் கேட்கும்."

சுந்தரம் சிரித்தார். "நாடகம் பார்க்க வருபவர்களுக்காக உன் நடிப்பு மாறக்கூடாது. உன் நடிப்பு அவர்களை இழுக்கவேண்டும். அவர்கள் கேட்கவேண்டுமென்பதற்காக நீ உரத்துப் பேசாதே. நீ உதட்டளவில் தாழ்ந்து பேசுகிற சொற்களைக் கூட அவர்கள் கூர்ந்து கேட்க வேண்டும்."

புதுஆடைகளும் அணிகளும் செய்யப்பட்டு, சில சீன்களும், புதிதாக எழுதப்பட்டன. நாடகம்ஆரம்பிக்க இரண்டுவாரத்துக்குமுன்வண்ணச்சுவரொட்டிகள் நகரெங்கும் மிளிர்ந்தன.

நாடகத்தேதி நெருங்க நெருங்கச் சூடாமணிக்குப் பயம் அதிகரித்தது. அவளுக்குத்தூக்கமே வருவதில்லை. இரவு வெகு நேரம்வரை பாடத்தைப்படித்துக்கொண்டிருப்பாள். சுந்தரம்பிள்ளை காலையில் எழுப்பும் பொழுது, கண்களைக் கசக்கியவண்ணம் பாடத்தில் ஒருபகுதியை ஒப்பிப்பாள்.

நாடகத்துக்கு ஒரு வாரந்தான் இருந்தது. ஒத்திகை ஆரம்பமாயிற்று. முதல்நாள் ஒத்திகையில் சூடாமணிக்கு அதிகத்தடங்கல் ஏற்பட்டது. கதாநாயகனும், மற்ற முக்கிய வேடந் தாங்குபவர்களும், நன்றாகத்தேர்ச்சி பெற்றவர்கள். எவ்விதகஷ்டமுமின்றித் தங்கள் பாகங்களைமுடித்தார்கள். அவர்களுடைய அலட்சியத்தைப் பார்த்தாலே,அவர்களுடன் தன்னால் நடிக்கமுடியுமா என்று சூடாமணிக்குச் சந்தேகம் வந்தது. ஒத்திகை முடியும்போது கதாநாயகன் வேஷம் போடும் நடிகன், பக்கத்திலிருப்பவனிடம் சொன்னான், "சுந்தரம்பிள்ளை கஷ்டப்படுகிறார். ஆனால் கழுதை குதிரையாகுமா என்பது சந்தேகம்தான்" என்று. இதைக்கேட்ட சூடாமணி பல்லைக்கடித்துக்கொண்டாள்.

நாடக ஆரம்பத்துக்கு எல்லா ஏற்பாடுகளையும் சுந்தரம்பிள்ளை செய்தார். நாடகத்தேதியன்று வெளிவந்த எல்லாப்பத்திரிக்கைகளும் பெரிய விளம்பரங்களைத் தாங்கி வந்தன. ஆரம்பவிழாவிற்கு நகரமேயர் தலைமைவகிக்க ஒப்புக்கொண்டார். பத்திரிக்கைகாரர்களும், பிரபல நடிகர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

நாடகம் ஆரம்பமாயிற்று. சூடாமணி, வேடமணிந்து தயாராக இருந்தாள். அவளுடைய முகத்தில் இடப்பட்டிருந்த பவுடர் வியர்வையால் இரண்டு மூன்று தடவை கலைந்துவிட்டது. பாடமே மறந்துவிடும் போலிருந்தது. முன் அடைப்பிலிருந்த சிறு இடுக்கின்வழியாகக் கொட்டகைக்குள் பார்த்தாள். ஏராளமான கூட்டம். முதல்வரிசையில் தலைவரும், அவருக்குப் பக்கத்தில் படமுதலாளி முத்து, டைரக்டர் பஞ்சுவும் உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்தில் வைரமாலைகள் ஒளிவிடப்பிரபல சினிமாநட்சத்திரங்கள் — கமலகுமாரி, காந்தாமணி, கலாவதி, மகாதேவன், கீர்த்தி, முதலியவர்கள் இருந்தனர். கடைசியில் கதாசிரியர் கந்தப்பன் வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். முதல் வரிசையிலிருந்த நட்சத்திரமாலையைக் கண்டதும் சூடாமணிக்கு நடுக்கம் வந்தது. நடிகைகள் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். தலைமை வகித்தவர் வயதானவர், தலைப்பாகை அணிந்திருந்தா் — மேடையில் நடக்கும் நாடகத்தைவிட பக்கத்தில் நடக்கும் பேச்சை ரசித்துக் கொண்டிருந்தார். சூடாமணியின் பார்வை இரண்டாவது வரிசைக்கு வந்தது. இரண்டாவது வரிசையில் முதல் நாற்காலியில் சுந்தரம் பிள்ளை உட்கார்ந்திருந்தார்.

ஐந்தாவது சீன் முடிந்தது; ஆறாவது சீன் ஆரம்பமாயிற்று கதாநாயகன் அபாரமாகப்பாடிக் கொண்டிருந்தான். அவனுடைய நண்பன் தரும் நகைச்சுவையைக் கேட்டு, மக்கள் கைதட்டியவண்ணம் இருந்தனர். அடுத்த சீனில் சூடாமணியின் பாகம் ஆரம்பமாகிறது. கையைப் பிசைந்துகொண்டு சூடாமணி நின்றாள். முதுகில் விழுந்த தட்டுதல் அவள் உடலையே குலுக்கிவிட்டது. "என்ன சூடா!" என்று சிரித்தார் சுந்தரம். அவருடன் பேசுவதற்குக் கூட அவளால் முடியவில்லை. "எல்லாம் வீண், வியர்த்தம்" என்று தோன்றியது. அவளுடைய நிலையைக் கண்டதும் சுந்தரம் வேறொன்றும் சொல்லாமல் தன்னிடத்துக்குப் போய்விட்டார்.

ஏழாவது சீன். சூடாமணி தோன்றவேண்டிய நேரம் வந்தது. மேடையின் ஓரத்தில் நின்று ஒரு கணம் தாமதித்தாள். அவளுடைய கண்கள் இரண்டாவது வரிசையில்

(13-ம் பக்கம் பார்க்க)

கோட்டை சரிகிறது!

இந்துமத அறநிலையப் பாதுகாப்புத் திருத்தச் சட்ட மசோதா, இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் ஆய்வுரையில் இருந்துவருகிறது. சென்னை சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்குழு, மசோதா பற்றிய கருத்துக்களைப் பொதுமக்களிடம் அறியவேண்டி, பல்வேறு தரத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து திரட்டி வருகிறது.

வைதிகம், இந்தச் சமயத்தில் தன் பிரதிநிதிகளை அனுப்பித், தன் எண்ணத்தை அக்குழுவினரிடம் எடுத்துரைக்கத் தவறவில்லை. புரோகிதத்தின் பரம்பரையில் வந்தோர் பலரும், இதுதான் சமயம் என்று, வலிய முன்சென்று, மசோதாவைக் கைநழுவ விட்டுவிடும்படியாக வற்புறுத்துகின்றனர். அவர்களிலே பலர் படித்த மேதாவிகள்; உலகை அறிந்தவர்கள்; நாட்டின் நிலைமையை நன்கு தெரிந்தவர்கள் தாம் என்றாலும், வழிவழிப் பழக்கத்தால் தம் வகுப்புக்குக் கிடைத்துவந்த உரிமைகளும், நலன்களும் இந்த மசோதாவால் அழிந்துபடக்கூடாது, என்ற இன உணர்வின் அடிப்படையில் தோன்றிய எண்ணம், மசோதாவை நடைமுறையில் கொண்டுவந்துவிடாதபடி செய்யத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது. மசோதாவைச் சட்டமாக்குவது, இந்து மதத்திற்கே கேடு சூழ்வதாம்; மத விவகாரங்களில் தலையிடும் ஒரு பெரும்பழி அரசாங்கத்தை வந்து சேர்கிறதாம்; மடாதிபதிகளின் அருமை பெருமைகளெல்லாம் பாதிக்கப்பட்டு விடுமாம்; வைதிக ஆகம தருமங்கள் நிறைவேற்றப்படாமல் உலகம் துன்பத்தில் கிடந்துழல வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டு விடுமாம்; இவ்வளவையும் கூறி மசோதாவை எதிர்க்கின்றனர் வைதிகபுரியினர்.

மடாதிபதிகள் தம் இரும்புப் பெட்டிகளைத் திறந்து, அதிலிருந்து பணங்களை உருண்டோடவிட்டு, மசோதாவைத் தடுக்க முயற்சித்து வருகின்றனர். மடாதிபதிகளுக்காக வாதாடி நிற்க, பலர் விலைபேசப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் முன் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

ஓமந்தூரார் மந்திரி சபையால் கொண்டுவரப்பட்ட மசோதா, இராசபாளையத்தார் மந்திரி சபையால் கைநழுவவிட்டு விடப்படுமோ என்ற ஐயம் பொதுமக்களிடம் உலவி வந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் முன், வைதிகத்தின் பிரதிநிதிகள் தத்தம் எண்ணங்களை எடுத்துவைக்கும் போது, மசோதாவை உயிரற்றதாக ஆக்கிவிடுவார்களோ என்றும் எண்ணவேண்டி வந்தது. ஆனால் மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டுவந்த மந்திரி தோழர் டி. எஸ். எஸ். ராஜன், உதகையில் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது,

> "இங்கும் அங்கும் எதிர்ப்புகள் இருந்தபோதிலும், கோவில்களையும், மடங்களையும் சீர்திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதைச் செய்வது சர்க்கார் கடமை. எதிர்ப்புகளால் சர்க்கார் பின்னடைய மாட்டார்கள்"

என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்றினைக் காணும்போது, மசோதா வெற்றிபெறக் கூடும் என்று எண்ணுவதற்கு இடமேற்படுகிறது.

திராவிடர் கழகத்தாரைப் பொறுத்தவரையில், இம்மசோதா முற்றும் முடிந்தவொரு சீர்திருத்தம் என்றுகொள்ளப்படவில்லை. தாம் அடைய எண்ணியிருக்கும் இலட்சிய பாதையில், இது ஒரு முன்னேற்றப் படியாக அமைகிறது என்ற அளவில் தான் அகமகிழ்கிறார்கள்.

கோவில்கள், மடங்கள், சத்திரஞ்சாவடிகள் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்பைத்தான் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மசோதாவின் மூலம் முனைகிறதேயல்லாமல், அவற்றில் இருந்துவரும் பழைமைப் பழக்க வழக்கங்களை மாற்றவோ — திருத்தவோ — எடுத்துவிடவோ அரசாங்கம் முற்படவில்லை. இது இன்றைய அரசியலாருக்கு வேண்டுமானால் முற்றும் முடிந்த சீர்திருத்தமாகப் படலாமேயொழிய, திராவிடர் கழகத்தார்க்கு இது ஒரு பகுதிச் சீர்திருத்தமாகத் தான் படுகிறது. இந்த அளவுக்காவது இப்பொழுது அரசாங்கம் வந்துள்ளதே என்பது கண்டு மகிழ்ச்சி கொள்கிறது; இந்த அளவுக்கு ஆதரவும் நல்குகிறது.

திராவிடர் கழகத்தாரைப் பொறுத்தமட்டில், கோயில்கள், மடங்கள், சத்தரஞ்சாவடிகள் ஆகியவற்றில் செய்ய எண்ணும் சீர்திருத்தம் இந்த அளவோடு நிற்கவில்லை, மேலும் விரிந்து கிடக்கிறது. அரசாங்கத்தார் இம்மசோதாவின் மூலமே சீர்திருத்தத்திற்கு முற்றுப் புள்ளி (புல்ஸ்டாப்) வைத்துவிடலாம் என்று எண்ணக்கூடும்; ஆனால், திராவிடர் கழகத்தார் மேலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம் ஏராளமாக இருக்கிறது என்ற எண்ணத்தால் இப்பொழுது கால் புள்ளி (கமா) வைக்கிறார்கள். இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா, மேலும் மேலும் வளரக் கூடிய மசோதா—வளர்க்கக் கூடிய மசோதா என்ற முடிவின்பேரில் தான், இந்த அளவுக்குத் தன் ஆதரவைக் கொடுக்கத் திராவிடர் கழகம் பாடுபட்டு வருகிறது.

மசோதாவை எதிர்ப்போர், அரசாங்கம் மதத்தில் தலையிட நினைக்கிறது, அது கூடாது என்று வாதிட்டு நிற்கின்றனர். மசோதாவைக் கொண்டு வருபவர்கள், கோவில்—மடங்கள் ஆகியவற்றின் சொத்துக்களின் நிர்வாகத்திலே ஊழல்கள் மலிந்துவிட்டன, ஆகவே

ஊழல்களைப் போக்கி நிர்வாகத்தைச் செம்மையுறச் செய்யவேண்டிய கடமை அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருக்கிறது என்று தெளிவுபடுத்துகிறார்கள்.

மசோதாவின் அடிப்படை நோக்கத்தை மறைக்க எண்ணி, எப்படிக் கூறினால் பாமர மக்கள் மயங்கித் தம் சார்பாக வருவார்கள் என்பதை அறிந்து, படித்த வைதிகப் பிரதிநிதிகள், மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்று கூக்குரலிடுகின்றனர். 'மக்களின் பிறவிக்குக் காரணமாக இருக்கும் மண்ணாசை—பொருளாசை—பெண்ணாசை ஆகிய ஆசைகளை விடும்படி சொல்லி, அவர்களைப் பிறவிப்பெருங்கடல் நீந்தச் செய்து, பேரின்ப வெள்ளத்தில் திளைத்திருக்கச் செய்வதே, மதத்தின் முக்கிய நோக்கமாகும்' என்றும், 'மக்களுக்கும் ஆண்டவனுக்கும் இருக்கும் தொடர்பினை விளக்கிக் காட்டி, அவர்களைத் தெளிவடையச் செய்யவே மதம் தோன்றியிருக்கிறது' என்றும் சொல்லிவருகிறார்கள். ஒவ்வொரு மதமும் 'ஆண்டவனை அடையும் வழியைத்' தனக்கேயுரிய தனிமுறைகளால் விளக்கி வருகின்றது. ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதக் கருத்துக்களை கொண்டிருக்கின்றது. இதனால் கருத்துக்கும் மதத்திற்கும் தொடர்பிருக்கிறது என்பது உணரப்படுகிறது. உலகச் சொத்துக்களைப்பற்றி மதம் கவலைப்படக்கூடாது; சொத்துக்கும் மதத்திற்கும் தொடர்பில்லை. சொத்துக்களைப்பற்றிக் கவலைப்படத்தான் அரசாங்கங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த முறைப்படி வைத்துப் பார்த்தால் அரசாங்கம் மதத்தில் தலையிட்டிருக்கிறதா அல்லது மதம் அரசாங்கத்தில் தலையிட்டிருக்கிறதா என்பது எளிதில் விளங்கிவிடும்.

சென்னை அரசாங்கம் மதத்திற்குச் சொந்தமான கருத்துக்களில் தலையிட்டிருக்கிறதா என்றால், இல்லை! ஆண்டவனை இப்படித்தான் வழிபடவேண்டும் என்றோ, அல்லது இந்து மதத்தினர் இன்னின்ன குறிகளைத் தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்றோ, அல்லது இந்து மதத்தினர் இன்னின்ன சமய நூல்களைத் தான் படிக்கவேண்டுமென்றோ, அல்லது இன்னின்ன முறைகளில்தான் மதச் சடங்குகளைப் புரியவேண்டும் என்றோ அரசாங்கம் எதுவும் வற்புறுத்துவதாகத் தெரியவில்லை. கும்பிட வேண்டிய ஆண்டவன் அல்லா என்றோ, ஜெகோவா என்றோ, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரமன் என்றோ, அனுமான் என்றோ வற்புறுத்தியிருந்தாலோ, அல்லது, வழிபடவேண்டிய வழி காட்டிகள் நபி என்றோ, ஏசு என்றோ, நாயனார்கள் என்றோ, ஆழ்வார்கள் என்றோ, புத்தர் என்றோ, மகாவீரர் என்றோ சொல்லியிருந்தாலோ, அல்லது, கொள்ளவேண்டிய வேதம் குரான் என்றோ, பைபிள் என்றோ, சித்தாந்தம் என்றோ, வைணவம் என்றோ, வேதாந்தம் என்றோ கூறியிருந்தாலோ அரசாங்கம் மதத்தில் தலையிடுகிறது என்று சொல்ல ஏதுவாக இருந்திருக்கும். அப்படி ஒன்றையும் சென்னை அரசாங்கம்வற்புறுத்தவில்லை. தான் ஆட்சி செய்யவேண்டிய சொத்து இந்து மதத்திடம் சிக்கிச் சீரழிவதைக் கண்டு, அதன் நிர்வாகப் பொறுப்பை இவ்வளவு நாட்கள் கழித்து ஏற்றுக்கொள்ளத்தான் அரசாங்கம் எண்ணியிருக்கிறது. உள்ளபடியே மதச் சொத்துக்களையெல்லாம் பிடுங்கிக் கொள்ளக்கூட அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது; காரணம் மதத்திற்குச் சொத்திருக்க முடியாது, சொத்தின் மேல் அது ஆசை வைக்கக்கூடாது, வைத்தாலும் பொருந்தாது. ஆனால் அந்த அளவுக்குக்கூட சென்னை அரசாங்கம் இன்று துணியவில்லை; மதச் சொத்துக்களின் நிர்வாகப் பொறுப்பை மட்டுந்தான் ஏற்றுக் கொள்ள விரும்பியுள்ளது.

வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்தால், மதந்தான் அரசாங்கத்தில் தலையிட்டுத் தனக்குச் சொத்துக்களை உரிமையாக்கிக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும். ஒரு காலத்தில் ஆண்டவர்களெல்லாம், மரத்தடிகளிலும், மரப்பொந்துகளிலும், குகைகளிலும், குளத்தங்கரைகளிலும் கல்லுருவங்களாக வீற்றிருந்தார்கள். அப்பொழுதெல்லாம், அவர்களுக்குச் சொத்திருந்ததில்லை; எனவே சொத்தை நிர்வகிக்கும் எந்தவிதமான பொறுப்பும் ஆண்டவனைக் காப்பாற்றி வந்த மதத்திற்கு ஏற்படவில்லை. பிற்காலத்தில் தோன்றிய பல்லவ, சாளுக்கிய, விஜயநகர, சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் தனியாட்சி முறையால்தான் கோவில்களுக்கும், மடங்களுக்கும், சத்திரங்களுக்கும் சொத்துக்கள் சேர்ந்தன. மகேந்திரவர்மப் பல்லவன், நரசிம்மப் பல்லவன், ராஜ ராஜசோழன், ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன், சுந்தர பாண்டியன், குலசேகர ஆழ்வார், சேரமான் பெருமாள் நாயனார், கிருஷ்ண தேவராயர் ஆகியோர், பொதுமக்கள் வரியாகவும், பிறவாகவும் செலுத்திய பணத்தை, ஆட்சி அதிகாரம் முழுதும் தம் கையிலிருப்பதால், எதிர்த்துக் கேட்போர் எவரும் இல்லை, எவரும் இருக்க முடியாது என்று கருதி, தத்தம் விருப்பப்படி, தாம் தாம் விரும்பிய ஆண்டவர்களுக்கு வாரியிறைத்தனர். வைணவனாக இருந்தவன் பெருமாள் கோயில்கள் கட்டினான்; சைவனாக இருந்தவன் சிவன் கோயில்கள் கட்டினான்; சிலர் இரண்டுவிதக் கோயில்களும் கட்டினார்கள். அரசாங்கத்தின் பணத்தை எடுத்துக்கோபுரங்கள் கட்டினார்கள்; கோயில்களுக்கு மான்யங்கள் விட்டார்கள்; தங்க வெள்ளி வாகனங்கள் செய்துவைத்தார்கள்; பொன், மணி அணிகலங்கள் அணிவித்தார்கள்; திருவிழாக்கள் நடத்தினார்கள்; ஆடம்பரங்கள் பல செய்தார்கள்; அவ்வளவுக்கும் சொத்துக்கள் எழுதிவைத்தனர். அதுபோலவே ஏழைகளிடத்தும், வறியோர்களிடத்தும் கொள்ளையடித்துப் பெரும்பொருள் சேர்த்து வைத்திருந்த பெருநிலக் கிழார்களும், பணக்காரர்களும் கோவில்களுக்கும், மடங்களுக்கும், சத்திரங்களுக்கும் மானியங்கள் விட்டனர். இப்படியாக, மண்ணாசையையும், பொன்னாசையையும் துறக்கச் சொல்லும் மதங்கள், மன்னர்களை மயங்கவைத்து, அரசாங்கத்தின் சொத்துக்களைத் தமதாக்கிக் கொண்டன. மேலும் மதம் அரசாங்கத்தின் அமைப்பு முறையையே தனக்குச் சலுகை காட்டி வரும்படியாகப் பன்னெடு நாட்களாகவே செய்து வந்திருக்கின்றது. ஆகவே, அரசாங்கம் மதத்தில் தலையிட்டதை விட, மதம் அரசாங்கத்தில் தலையிட்டதுதான் அளவுக்கு மீறியதாக இருந்து வந்திருப்பதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. இன்றைய நிலையில் அரசாங்கம் மதத்தில் தலையிடுகிறதா என்றால், இல்லை

அதற்காக மதங்களை எல்லாம் அரசாங்கம் கவனிக்க மறுக்கிறதா என்றால், அதுவும் இல்லை! மதங்களின் நலனை எண்ணி அவைகளை அணைத்துப் பாதுகாக்கவே விரும்பி நிற்கிறது. ஆனால் மதம் மட்டும் இன்னும் தன் ஆதிக்கத்தை அரசாங்கத்தில் நிலைநாட்டித்தான் வருகிறது. மதத்தில் அரசாங்கம் நாட்டிவந்த சிறிது ஆதிக்கமும் அடியோடு மறைந்துவிட்டது; ஆனால் அரசாங்கத்தில் நாட்டிவந்த ஆதிக்கத்தைச் சிறிதுகூடத் தளர்த்திக்கொள்ள மதம் இன்னும் இசையவில்லை!

அப்படியானால் இன்றைய அரசாங்கம் பகுத்தறிவின் வழி செல்லும் மதச் சார்பற்ற அரசாங்கமா? அதுவும் இல்லை! இன்றைய அரசாங்கம், மதச் சார்பற்றது என்று சொல்லி, எல்லா மதங்களையும் அணைத்துக் கொள்ளும் அரசாங்கம் — ஆனால் எந்த மதத்தின் கருத்திலும் கைவைக்க எண்ணாத அரசாங்கம்.

மதத்தின் சொத்துக்களில் தலையிட அரசாங்கத்திற்கு ஏது உரிமை, என்று கடாவி நிற்கின்றனர், வஞ்சக வைத்தியநாத அய்யர்களும், வைதிக வரதாச்சாரிகளும். மதம், தன் சொத்துக்களை, வானத்தினின்றும் தன் வல்லமையால் பொன்னகச் சொரிந்தா சேர்த்துக் கொண்டது? வரலாறு அப்படிக் கூறவில்லையே! மதத்திற்கு யார் சொத்துக்களை உரிமையாக்கினார்கள்? யதேச்சாதிகார மன்னர்கள் அல்லவா! மக்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது அரசாங்கச் சொத்துக்கள் மதத்திற்கு உரிமையாக்கப்பட்டன. இப்பொழுது மக்கள் விழித்துக் கொண்டார்கள்! எனவே அரசாங்கத்தின் உரிமையை மீண்டும் மதத்திற்கு விடப்பட்ட சொத்துக்களின் மீது நிலைநாட்ட முயலுகின்றனர். இதில் என்ன தவறு? வரதாச்சாரிகளும், வைத்தியநாத அய்யர்களும் துடிக்கிறார்கள் மசோதாவைக் கண்டு என்றால், அதன் உட்கிடக்கை என்ன என்று கருதுகிறீர்கள்? தம் இன நலம் எவ்வகையிலும் பாதிக்கப்படக் கூடாது, அது காப்பாற்றப்படவேண்டும் என்பதுதானே!

சென்னை சட்ட சபையில் வைத்தியநாத அய்யரே முன்பு குறிப்பிட்டுள்ளபடி, சென்னை மாகாணத்தின் மூன்றில் ஒரு பகுதிச் சொத்துக்கள் கோவில் மடங்களிலே முடக்கப்பட்டிருக்கின்றன, நாட்டின் மூன்றிலொருபாகச் சொத்து வீணர்களின் கைகளிலே விளையாட்டுக் கருவிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. பக்தர்களின் 'திருவிளையாடல்கள்' யாதொரு குறையுமின்றி நடைபெற வேண்டுமென வாதாட வந்துவிட்டார் வைத்தியநாத அய்யர்! அவருக்குப் பக்கமேளம் கொட்டி வருகின்றனர் அண்ணாமலைகளும், சகஜாநந்தங்களும்!

ஓமந்தூரார், சட்டசபையில் கொடுத்த கணக்குப்படி, இந்த நாட்டில், பணம் வரவு செலவு வைத்திருக்கக் கூடிய கோயில்களின் எண்ணிக்கை மட்டும் 27000. சோம்பேறிகளுக்குச் சோறுபோட்டு வளர்க்கும் சத்திரஞ் சாவடிகளின் தொகை 25000. உண்டு, உப்பி, தின்ற சோறு செரிப்பதற்குத் தொந்தியில் சந்தனந் தடவி, வெண்சாமரம் சாத்தி, ஒழிந்தவேளைகளில் அருக்கு மங்கையரின் மலரடி தடவி, அவர் கருத்தறிந்த பின் அரசியலை தடவி, இகத்திற்கும் பரத்திற்கும் உள்ள தொடர்பைக் காணும் நெறியில், எஞ்ஞான்றும் சிந்தையைச் செலவிட்டு வரும் மடாதிபதிகள் வாழும் மடங்களின் அளவு 3000. இதில் பெரிய மடங்களாக உள்ளவை மட்டும் 164. இவை எல்லாவற்றிலிருந்து மட்டும் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானம் ரூபாய் பத்து கோடிக்கு மேல். இந்த பத்துகோடி ரூபாயும் தின்று கொழுக்கும் சோம்பேறிக் கூட்டத்தினர்க்குச் செலவழிக்கப்படுகின்றதேயல்லாமல், உழைக்கும் பொதுமக்களுக்குக் கிஞ்சிற்றும் பயன் படுவதில்லையே! மதத்திடத்தே இவ்வளவு சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டதால், நாட்டின் பொதுநிலையுயர ஏதாவது வழி பிறந்ததா?

'விருப்பு வெறுப்பற்ற விமலனாக' இருக்கும் ஆண்டவனுக்கு சொத்து தேவையில்லை, 'எல்லாம் அவன் படைப்பிலுள்ளவை' என்னும் கருத்தால்! அவன் எதையும் விரும்புவதில்லை, 'எதையும் ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் அவன்பாலுள்ளது' என்ற தன்மையால்! அவன் எதையும் மனிதனிடம் கேட்பதில்லை, அவனுக்கு 'எதுவும் அவசியமில்லாத' காரணத்தால்! இந்தக் காரணங்களால்தான் போலும், 'ஆண்டவன், தன்னிடத்தே விடப்பட்டிருக்கும்' சொத்துக்களின் பேரில் நிகழும் கொள்ளையையும், மோசடியையும் கவனிப்பதேயில்லை! 'ஆண்டவன்' கவனிக்க மறந்த சொத்துக்களை, அரசாங்கந்தானே கவனிக்க முன்வரவேண்டும்! இதன் உண்மை பழுத்த வைதிகர்களுக்குப் புலப்படாமற் போவானேன்? ஒருகால் 'பக்தி மயக்கம்' அவர்களை அந்த அளவுக்கு ஆட்கொண்டிருக்கிறது போலும்!

88 அறநிலையங்களில் நடைபெற்ற மோசடிகளை, ஓமந்தூரார் அன்று சட்ட சபையில் விளங்க வைத்தார், அரசாங்கத்தின் கண்ணுக்கு அகப்படாமல் மறைந்து போன மோசடிகள் எவ்வளவோ! கண்ணுக்கு அகப்பட்டு நழுவிப் போன மோசடிகள் எவ்வளவோ! இன்னும் மறைவாக நடந்துகொண்டி-

(9-ம் பக்கம் பார்க்க)

அழகர்சாமி

3-ம் பக்கத் தொடர்ச்சி

தின்சார்பாக நன்றி" என்றேன். போவதற்கு எழுந்த அவர்கள் உட்காரத்தொடங்கினார்கள். "சீனுவாசனும், 'கல்கி'யும் பெரும் கஷ்டப்பட்டு இந்த மாநாட்டை நடத்தியதற்கு நன்றி" என்றேன். மிச்சம் மீதி நின்றுகொண்டிருந்தமக்களும் அவர்களும் உட்கார்ந்தார்கள். "வெங்கட்டராமசாத்திரியார் இராமசாமியைப்புகழ்ந்தார்—கல்கியார் இகழ்ந்தார்—இது அவரவர்கள் இஷ்டம்! இதில் நான் தலையிடவில்லை. சர்க்கார் தாசனை இராமசாமி இன்று பத்து மணிக்குச், சட்டத்தில் எல்லாம் பெரியசட்டமான 124—A யின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைக்குப் போயிருக்கிறார்" என்றேன். (கைதான செய்தி அப்பொழுது தான் கிடைத்தது) பின்னர் அழகர்சாமிக்குப் பயந்தே கல்கியின் கண்டனத்துக்குப் பதில் சொன்னேன். மாநாடு முடிந்தது.

எதிரிகளால் கூட்டப்படும் மாநாடாயினும் நமது புத்திபலத்தால் நமக்குச் சாதகமாக்கிக்கொள்ளலாம் என்ற இந்த முறையை நமது இளைஞர்களுக்குக் காட்டியவர் அழகர்சாமியேயாகும்.

(தொடரும்)

திராவிட நாடு

ஞாயிறு] 12—6—49 [காஞ்சி

'அடக்குமுறைக் காணிக்கை!'

✲

ரூ 3000! 'அடக்குமுறைக் காணிக்கை'யாகச் செலுத்தவேண்டும்! அடிப்படை உரிமைகளை 'வழங்க' ஆவலுற்று நிற்கும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும்! அதுவும் 25—6—49ம் நாளுக்குள் செலுத்த வேண்டும்! இது "திராவிட நாட்"டிற்குச் சென்னை அரசியலார், 'பக்திப் பரவச மேலீட்டால்' பிறப்பித்திருக்கும் கட்டளை!

"திராவிடநாடு", யாரையும் அனாவசியமாக அலட்சியப்படுத்தாமல், ஆனால் அதே நிலையில் யாருக்கும் அடிமையாகாமல், யாரையும் தூற்றாமல், ஆனால் அதேபோது எந்த உண்மைக்கருத்தையும் எடுத்துரைக்கத் தவறாமல், யாருடைய எதிர்ப்பையும் வரவழைத்துக் கொள்ளாமல், ஆனால் அதே சமயம் யாருடைய எதிர்ப்புக்கும் அஞ்சாமல், யாருடைய மனமும் நோகவேண்டும் என்பதற்காக எதையும் சொல்லாமல், ஆனால் அதே காலத்தில் நாடு திருந்தவேண்டும் என்ற நாட்டத்தை மறந்துவிடாமல், யாரையும் துவேஷிக்க வேண்டும் என்ற நோக்கமில்லாமல், ஆனால் அதே பொழுது வரலாற்று நிகழ்ச்சிகளை மக்கள் முன் வைக்கத் தயங்காமல், மாற்றார் யாரைப்பற்றியும் பொறாமையுள்ளங் கொள்ளாமல், ஆனால் அதே நிலையில் கழகத்தின் வளர்ச்சிகண்டு பொறாமையுற்று, உள்ளங் கருகி, உடல்வெந்து, புன்செயல்கள் செய்யப் புறப்படும் புல்லறிவாளர்களின் அறியாமைகண்டு, புன்சிரிப்புக் கொண்டு, பரிதாபப்படுவதல்லால் வேறேதும் நினையாமல், நேர்மை வழியினின்றும் நெறி பிறழாமல், சென்ற ஏழு ஆண்டு காலமாகத் தொண்டாற்றி வருகிறது; இனியும் தொண்டாற்றி வரும்.

திராவிடர் கழகமும், அதற்கு உறுதுணையாக இருந்துவரும் பத்திரிகைகளும், அவற்றிற்கு இருக்கும் ஆற்றல் சிறிதளவே யாயினும், அவை ஆற்றியிருக்கும் —ஆற்றிவரும் தொண்டும், பகலவன் ஒளிபோல் பரவிப் பயனளித்து வருவன கண்டு, சனாதனிகளும்—வர்ணாச்சிரமிகளும்—வைதிகர்களும் — சுயநலக்காரர்களும் — அரசியல பிற்போக்காளர்களும் மிரண்டு, நெறி பிறழாக் கழகத்தையும், அதனைச் சார்ந்த இதழ்களையும், குறிப்பாக "திராவிட நாடு," "விடுதலை" ஆகிய இரண்டினையும் ஒழித்துக்கட்டி விடுவது எனக் கங்கணங் கட்டிக் கொண்டு, அவரவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளின் மூலம், தங்கள் தங்கள் பாணங்களை, வெவ்வேறு மூலை முடுக்குகளில் நின்றுகொண்டு வீசத் தலைப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட செயல்களிலே ஒன்றுதான், இப்பொழுது "திராவிட நாட்"டின்மீது ஏவப்பட்டிருக்கும் ரூ. 3000—ஜாமீன் பாணம்!

"திராவிட நாடு," அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் பற்றிய கருத்துக்களைக் காரண காரியங்களோடு விளக்கிக் காட்டி, நாட்டு மக்களுக்கு அறிவு கொளுத்தும் அரிய பணியினைச் செய்து வருவதால், முற்போக்கு உள்ளம் படைத்த இளைஞர் உலகம் அவற்றை யெல்லாம் கேட்டு—அறிந்து—சிந்தித்துத்—தெளிவடைந்து, திராவிடர் கழகப் பாசறைகளில் வீரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டு வருகிறார்கள்.

இளைஞர்களுக்கு அறிவுறுத்தித் தெளிவுண்டாக்கும் நற்பணியினை மேற்கொண்ட காரணத்திற்காகத்தான், பொறாமையுற்று எழும்பிய கிரேக்க அரசாங்கம் சாக்ரடீஸுக்கு நஞ்சு ஊட்டிக் கொன்றது.

எண்ண—எழுத—எடுத்துக்கூற உரிமையளிப்போம் என்று இங்கு வாய்ப்பறை சாற்றிவந்த அதே வாய்தான், இப்பொழுது "திராவிட நாட்"டிடம் 'அடக்குமுறைக் காணிக்கை'கேட்கிறது. "திராவிடநாட்"டின் பேனா,தான் உருவாக்கும் ஒவ்வொரு சொல்லையும் தட்டிப் பார்த்து, பயனுடைய சொற்களா என்று ஆராய்ந்து, பிறிதோர் வெல்லுஞ் சொல் அதற்கில்லை என்பதைத் தெரிந்து, அளவறிந்து பயன்படுத்தி வருகிறது. ஆகையால்தான் பொறாமை யுள்ளங்கொண்ட புன்மதியினர் பேனாவோடு பேனாவை நேர்நிறுத்திப் பார்க்க முடியாமல், அரசாங்கத்தின் அதிகாரத்தை அண்டித் தஞ்சமடைந்து நிற்கின்றனர். அரசாங்கம் பேனா முனை கொண்டல்ல, அதிகாரத் துப்பாக்கியின் உதவிகொண்டு, பேனா முனையை அல்ல, பேனா பிடித்தவர்களையே சுடப் பார்க்கின்றது.

சென்ற ஏப்ரல் திங்களில் "திராவிடநாட்டி"ல் எழுதிய கட்டுரைகளின் மீது குற்றச்சாட்டு! கட்டுரைகள் வந்தது 1948 ஏப்ரலில்! அதற்காக அடக்குமுறைப்பாணத்தை வீசுவது 1949 ஜூனில்! இதிலிருந்து விளங்கும், உள்ளபடியே கட்டுரைகளின் காரணமாக அடக்குமுறை வீசப்பட்டிருக்கிறதா அல்லது "திராவிட நாட்"டை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக அடக்குமுறை வீசப்பட்டிருக்கிறதா என்பது. கட்டுரைகளைப் படித்துப் பார்ப்போர்க்கு இன்னும் தெளிவாக விளங்கும் எவ்வளவு தெளிவான மனப்பான்மையில் சாதாரணமான உண்மைக் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது.

இந்த 'அடக்குமுறைக் காணிக்கை' ஒரு சோதனை! "திராவிடநாட்"டின் மீது மட்டும் பரீட்சிக்கப்படும் சோதனையல்ல, திராவிடர் கழகத்தின் மீது—திராவிட நாட்டின் மீது பரீட்சிக்கப்படும் சோதனையாகும்! திராவிடப் பெருங்குடி மக்கள் தங்களின் ஆதரவு "திராவிட நாடு"க்கு என்றும் உண்டு என்பதை, அரசியலார்க்கு எடுத்துக்காட்ட, இந்நெருக்கடியைத் தீர்த்து, மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கும் ஊக்கமளித்து, 'எதையும் தாங்க இந்த இதயம்' உண்டு என்று வெற்றிமுழக்கமிட்டு வீறிட்டுக் கிளம்ப வேண்டுகிறோம்!

✲

கோட்டை சரிகிறது!

7-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கும் மோசடிகள் எவ்வளவோ! கண்ணுக்கு அகப்பட்டகணக்குப்படி பார்த்தாலும், 88 அறநிலையங்களில் ரூ. 200 லிருந்து ரூ. 2,00,000 வரையில் மோசடிகள் நடந்திருக்க, அதை ஆண்டவர்கள் பார்த்துக் கொண்டுதானே இதுவரையில்இருந்தார்கள், அரசாங்கம் தலையிட்டதன் பேரில்தானேஒழுங்கு ஓரளவுக்குஏற்பட முடிந்தது. மக்களின் சார்புடையது என்று கருதப்படும் அரசாங்கம் கோவில்மடங்களின் சொத்து நிர்வாகத்தை ஏற்று நடத்தக்கூடாதென்று, மசோதாவை எதிர்ப்போர் வாதிடுகிறார்களென்றால், தனிப்பட்ட, சோம்பேறிகளான, எதேச்சாதிகாரம் கொண்ட, மடாதிபதிகள்—மத குருக்கள்மார் —புரோகிதர்கள்—மடபக்தர்கள் ஆகியவர்களின் நிர்வாகத்தின் கீழ் அதிக மோசடிகளும், கொள்ளைகளும் நடைபெறவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள், அல்லது அந்த நிலைக்குத் தங்களையறியாமல் நிர்வாகத்தைக் கொண்டு போய் விடுகிறார்கள் என்பதுதானே பொருள். இத்தகைய சூழ்ச்சிச் செயல்களுக்குப் பகுத்தறிவு படைத்த பொதுமக்கள் இடங்கொடுக்கலாமா என்பதை ஓர்ந்து பாருங்கள்.

மதச் சொத்துக்களிலே மோசடி நடைபெறுகிறது, ஆகவே அவற்றைக் கைப்பற்றிப் பொதுமக்களுக்கு நலம் பயக்கும் நல்ல செயல்களுக்கு, அரசாங்கம் செலவிடவேண்டும் என்ற கருத்தைச், சுயமரியாதை இயக்கம் சில ஆண்டுகளுக்கு முன் அறிவுறுத்தியபோது, மதவாதிகளும் காங்கிரஸ்காரர்களும் எதிர்த்தனர்; சிலவிடங்களிலே சுயமரியாதைக்காரர்களைத் தாக்கவும் செய்தனர். இன்று அதே முறையைக் காங்கிரஸ்காரர்கள் கையாளுவது கண்டு மகிழ்கிறார்கள்.

இந்துமத அறநிலையப் பாதுகாப்புத்திருத்தச்சட்ட மசோ தாவைச் சட்டமாக்கி, அமுலுக்குக் கொண்டு வராமல் தடைசெய்யவேண்டி, பரம்பரை வைதிகபுரியினர் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். வைதிகக்கோட்டையைப் பின்புறமாகப் பகுத்தறிவுப்பீரங்கிகள் தாக்கி தகர்த்துக் கொண்டு வருகின்றன. வைதிகர்கள் வேதஆகமம் என்னும் ஈட்டிகள் கொண்டு முன் பக்கத்தில் எதிர்த்துப் பார்க்கின்றனர். போரின் காலம் வேண்டுமானால் சிறிது நீடிக்கலாமே தவிர, என்னவோ அழிவுமட்டும் பின்பக்கமாக, அவர்கள் அறியாமலேயே, அவர்களை அணைத்துக்கொண்டு விடும் என்பது மட்டும் உறுதி. வைதிகக் கோட்டையின் வாயிலோடு இணைக்கப் பட்டிருந்த வழிகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருகின்றன. அந்த முயற்சியிலே ஒன்றுதான் இந்த அறநிலையப்பாதுகாப்புத் திருத்தச் சட்ட மசோதாவாகும். அந்தச் செயலைச்சென்னை அரசாங்கம் செய்ய முன்வந்தது கண்டு பகுத்தறிவியக்கம் அந்த அளவுக்கு அவர்களுக்குப் பாராட்டுக்கூறி வரவேற்கிறது. பகுத்தறிவுப் பீரங்கி வெடிக்க வெடிக்க வைதிகக் கோட்டை சரிந்து வருகிறது என்பது நன்றாகப் புலப்படுகிறது!

வேண்டுகோள்.

அன்புடையீர்!

வணக்கம். சென்ற ஏழு ஆண்டுகளாகத் திராவிடப் பெருங்குடி மக்களின் நலன் கருதி நடத்தப்பட்டு வரும் "திராவிட நாடு" இதழின் மீது, சென்னை அரசியலார் தம் அடக்குமுறைப் பாணத்தை இப்போது ஏவியுள்ளார்கள்.

25-6—49-ம் நாளுக்குள், ரூ. 3000—ஜாமீன் தொகை கட்டித் தீரவேண்டும் எனக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

"திராவிட நாடு", திராவிட மக்களின் நலனுக்காகப் பாடுபடுகிறது என்பதை அறிவிக்கவும், திராவிட மக்களின் ஆதரவு அதற்கு உண்டு என்பதைக் காட்டவும், இவ்வாய்ப்பை ஏற்றுத், தங்களாலான நன்கொடையை, இந்நெருக்கடி தீரும் வகையில், அளித்தருளக் கோருகிறேன்.

காஞ்சிபுரம்,
9—6—49

அன்பன்,
அண்ணாதுரை.

நன்கொடை தந்துதவிய அன்பர்கள்:—

வாலாஜாபாத்,	W. K. தேவராசன்	100—0—0
காஞ்சிபுரம்.	V. புட்டாசாமி	100—0—0
"	அ. க. தங்கவேலர்	100—0—0
"	N. K. கணபதி	100—0—0
"	N. K, அரங்கநாதன்	100—0—0
"	A, பாலகிருஷ்ணனார்	100—0—0
"	K. S. முனுசாமி	50—0—0
	ஆக ரூபாய்	650—0—0

குறிப்பு:— மேலும் நன்கொடையை விரைவில் எதிர்பார்க்கிறேன். வணக்கம்.

வகுப்புக்கு ஏற்ற நீதி

அரசாங்க அலுவல்களில் ஆட்களை அமர்த்தும்போதும், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போதும் வகுப்புவாரிப் பிரதிநித்வ முறையைக் கையாளுவதென்று சென்னை அரசாங்கம் உறுதிபூண்டு வருகிறது. அரசாங்கம் கையாண்டிருக்கும் இந்த உறுதியைக் கண்டிக்க, வகுப்புவாத நச்சுநீரை, ஓய்வு ஒழிவில்லாமல்மறைமுகமாகப்பொழிந்து கொண்டிருக்கும் சில பத்திரிகைகளும், பிறரும் சீறிப்பாய்ந்த வண்ணம் இருக்கின்றனர். வகுப்பு நலன்கள் எவ்வகையிலும் குறைந்துவிடாமல் பாதுகாத்துத், தம்முடைய இனத்திற்குச் சேவை செய்வதிலே அல்லும் பகலும் அயராதுமுனைந்து நின்று பாடுபட்டுவரும் பத்திரிகைகளிலே, தலைசிறந்து விளங்கும் 'இந்து'வும், 'சுதேசமித்திர'னும் இப்பொழுது சினம் மேலிட்டுத் தலைதுள்ளிக்குதிக்கின்றன.

நம்நாட்டின் அமைப்பில் சாதிப்பிரிவுகள் தோன்றி, உயர்ந்த சாதிக்காரரகளெனப் பெயர் பெற்ற ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் வாழ்க்கைவசதிகளனைத்தும் பெறும்படியான நிலைமையும், இடைத்தர சாதிக்காரர்கள் பிற்போக்கு வகுப்பினர்கள் எனக்கருதப்பட்டு வாழ்க்கை வசதிகளிலே பல மறுக்கப்படும்படியான நிலைமையும், தீண்டப்படாத சாதியினர் என்று சிலர், தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு, வாழ்க்கை வசதிகள் அனைத்தும் மறுக்கப்படும்படியான நிலைமையும் பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நின்று நிலவிவரும்படியானமுறை ஏற்பட்டுவிட்டது.

சாதியின்காரணமாக ஒருகூட்டம் உல்லாச வாழ்வு வாழவும், சாதியின் காரணமாகவே மற்றொரு கூட்டம் அடிமைவேலை செய்து உழலவும் ஆண்நிலைமையை அறிந்த நீதிக்கட்சி, சாதியின் காரணமாக வீழ்த்தப்பட்டவர்களை உயர் நிலைக்குக் கொண்டு வரவேண்டுமாயின், அந்தச் சாதியின் காரணத்தைக் காட்டித்தான் உயர்நிலைக்கு ஏற்ற முடியும் என்ற பேருண்மையைத் தெளிந்துகொண்டு, தான் ஆட்சிப்பீடம் அமரும்போது, வகுப்புகளுக்கு நீதி வழங்கும் வகுப்புவாரிப் பிரதிநித்வ முறையை அமுலுக்குக்கொண்டுவந்தது.

எல்லா வகுப்பினரையும், ஏற்றத்தாழ்வின்றி, ஓரேநிலைக்குக் கொண்டுவர, வீழ்ந்துகிடக்கும் சமுதாயத்திற்கு, அவையவை வீழ்ந்துகிடக்கும் அளவுக்கு ஏற்ப நீதி வழங்க வேண்டும்—சலுகை காட்ட வேண்டும்—கைகொடுக்கவேண்டும்— இடமளிக்கவேண்டும் என்று கருதியே வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் துறைகளிலெல்லாம், வகுப்புவாரி முறையைக் கொண்டுவரத் திட்டம் தீட்டியது நீதிக்கட்சி. தன்ஆற்றலுக்கு ஏற்ற அளவுக்கு அந்தத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரவும் பாடுபட்டது.

வகுப்புவாரி முறையைக் கல்லூரிகளிலும், அரசாங்க அலுவல்களிலும், நீதிக்கட்சி புகுத்திய பிறகுதான், பிற்போக்கு வகுப்பினர் ஓரளவுக்குக் கல்விபெறவும், சமுதாயத்தில் ஓரளவுக்குச் சமநிலை பெற்று மதிப்படையவும் வழி ஏற்பட்டது. இந்த முறையை அமுலுக்குக் கொண்டுவந்தபோது, அதன் உட்கிடக்கையை அறியமாட்டாத காங்கிரஸ்காரர்கள் நீதிக்கட்சியை வகுப்புவாதக்கட்சி என்று தூற்றினர்; கேலிசெய்தனர்; வசைமாரி பொழிந்தனர். உயர்சாதிவகுப்பினர் காங்கிரஸ்காரர்களின் இந்தப்போக்குக்கண்டு அகங்குளிர்ந்தனர்; புளகாங்கிதம் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர்.

பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்கள், இன்று, ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு, வகுப்புவாரி முறையின் உண்மையையும், அவசியத்தையும், முக்கியத்வத்தையும் உணருகிறார்கள். சூழ்நிலை அந்த நிலைமைக்கு அவர்களைக் கொண்டுவந்து வைத்துள்ளது. வகுப்புவாரி முறை இருந்து தீரவேண்டியதன் அவசியத்தை மந்திரிள் கோபால் ரெட்டியும், பக்தவத்சலமும் அண்மையில் வற்புறுத்தியதை நன்கு அறியலாம். நீதிகட்சியின் இந்தக் கொள்கையைக் காரசாரமாக, மட்டரகச் சொற்களால்கூட, திட்டித்தூற்றி வந்த 'தினசரி'யார் இன்றுள்ள நிலைமையைத் தெரிந்துவகுப்புவாரிமுறைக்கு வாதாடிநிற்கிறார். காங்கிரஸ் காரர்களின் உள்ளம் இந்த அளவுக்குப் பண்பட்டது கண்டு நாம் மகிழ்கிறோம்.

வகுப்புவாரி முறையை அரசாங்கம் கையாள வேண்டியதன் இன்றியமையாமையையும், சிலகாலம் வரையில் அரசாங்க ஏடுகளில்சாதிப் பெயர் குறிக்க வேண்டியதன் அவசியத்தையும் குறித்துச் சென்னை அரசாங்கத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் குறிப்பிடுவதைக் காணுங்கள்.

"வகுப்பு வேற்றுமைகளை ஒழிப்பது என்பது, சமுதாயம் மேற்கொள்ளவேண்டியதொரு சீர்திருத்தமாகும். சமுதாயத்தில் வளரும் எண்ணங்களின் முற்போக்குக்கு ஏற்றபடி, அரசாங்கம் இவ்விஷயங்களில் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை படிப்படியாகக் கொள்ளக்கூடியதாகத்தானிருக்கும். அரசாங்கம் மட்டும் தன் ரிகார்டுகளில் சாதிப்பெயரைக் குறிக்காமல் விட்டுவிடுமேயானால், ஆனால், அதே சமயத்தில் வெளியுலகில் சாதிப்பெயரைக் குறிப்பிடும் பழக்கம் இருந்துவருமேயானால், அது ஒழுங்கற்ற முறைகளிலும், ஆட்சி முறைச் சங்கடங்களிலும் கொண்டுபோம்விடும்."

என்று கூறியுள்ளார்.

சமுதாயத்தில் மக்கள் சமநிலை அடையவேண்டுமானால், வகுப்புகளுக்குச் சமசந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். சமசந்தர்ப்பங்கள் ஏற்பட வகுப்புகளுக்கு ஏற்ற நீதி கொடுக்கப்பட வேண்டும். ஏற்ற நீதி கொடுக்க ஒவ்வொரு சாதியின் நிலைமையை அரசாங்கம் உய்த்துணர வேண்டியிருக்கிறது. ஆகவேதான் வகுப்புகளைப் பிரித்துக் காண வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று அரசாங்க அதிகாரி கூறும் காரணத்தை நாம் போற்றுகிறோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

கதிரவன் கறைகள்

பண்டைக்காலந் தொடங்கிப் பொதுவாக எல்லா நாடுகளிலும், வானநூல் பற்றிய அறிவு சிறந்து வளர்ந்து வந்திருக்கிறது. மனிதன் காட்டுமிராண்டியாகத் திரிந்த காலத்தில், தன்முன் எதிர்ப்படும் பொருள்களின் தன்மையை அறிந்துகொள்ளும் அடிப்படை முயற்சியில் ஈடுபட்டபோது, வானத்தைக் கண்டு அதில் ஏற்படும் மாற்றங்களை அறியத் தொடங்கினான். வானில் ஏற்படும் மாற்றங்கள் ஒருவரையறைக்குட்பட்டு மீண்டும் மீண்டும் தோன்றப் பார்த்து, அவற்றின் மூலம் காலத்தைக் கணக்கிட்டுக்கொள்ளக் கற்றுக்கொண்டான். இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், குளிர்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம் ஆகிய பருவநிலைகளை முன் கூட்டியே அறிந்துகொள்ளவும், அவ்வக் காலநிலைகளுக்கேற்பத் தன் வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொள்ளவும் வானநூலறிவு மனிதனுக்கு இன்றியமையாது தேவைப்பட்டது. மனிதனுக்கு அறிவு வளரத் தொடங்கிய ஒவ்வொரு நாட்டிலும், வானநூலறிவும் உடன் வளரத்தொடங்கிற்று என்னலாம்.

இற்றை நாட்களில் இருப்பன போன்ற நுண்ணிய பொறிகள் அக்காலங்களில் இல்லையாதலால், மக்கள் தம் கண்ணுக்குப் புலனாகும் அறிவைக் கொண்டே வானத்தின் உண்மைகளை அறியவேண்டியவர்களாக இருந்தார்கள். மேலும் இக்காலத்திய ஆராய்ச்சி முறைகளும் அவர்களால் அறிய முடியாதிருந்த காலம் அது. ஆகவேதான், வானநூலறிவு படிப்படியாக வளரவேண்டியதாயிருந்தது. ஆனால் தொலைநோக்கு ஆடி (தூர திருஷ்டிக் கண்ணாடி) கண்டுபிடிக்கப்பட்ட பின், வானநூல் முன்னையிலும் பன்மடங்கு வளர்ந்து முன்னேற்றமடையத் தொடங்கிற்று.

தொலைநோக்கு ஆடி, வானநூலறிஞன் கையில் அகப்பட்டவுடன், அதனைக்கொண்டு கண்ணுக்குத்தெரியாத எத்துணையோ உடுக்களையும் (நட்சத்திரங்கள்), கோள்களையும் (கிரகங்கள்), கோள்களைச் சுற்றி வட்டமிடும் துணைக்கோள்களையும், கதிரவனிடத்திலுள்ள கறைகளையும், சனிக்கோளைச் சுற்றியிருக்கும்வட்டத்தையும் அறிந்தார்கள்.

ஞாயிற்று மண்டலத்துக்கு நடுநாயமாக விளங்கும் கதிரவன், உலகிலிருந்து 9 கோடியே 29 லட்சம் மைல் தொலைவில் இருக்கிறது. அது ஒரு தன்னொளி உமிழ்ந்து நிற்கும் நெருப்புப் பிழம்பாகும். அதாவது பிறிதொன்றின் துணையின்றித் தானே தன்னொளியால் விளங்கி நிற்பதாகும். இஞ்ஞாயிறுகோளத்தின் நடுப்பாகத்தை ஒளிக்கோளம் எனவும், இதற்கு வெளியிலிருப்பதை வர்ணகோளமெனவும், இவ்விரண்டிற்கும் வெளிப்புறத்திலிருப்பதைப் பரிவேடம் எனவும், கதிரவனிலிருந்து வெளியே பரப்பும்ஒளிவெப்ப அலைகளைக் கதிர்கள் எனவும் வகுப்பார்கள் விஞ்ஞானிகள்.

சந்திரனை நாம் பார்க்கும்போது அதில் மறுக்களைக் காண்கிறோம். அம்மறுக்களை மனிதனென்றும், நண்டென்றும், கழுதையென்றும், ஔவையார் கிழவி என்றும், மான் என்றும், தங்கள் தங்கள் போக்கில் பெயரிட்டழைப்பார்கள். ஆனால் தொலைநோக்கு ஆடிகொண்டு பார்த்தால், அது ஒரு எரிமலைக் கூட்டமாகத் தென்படும். அந்த எரிமலைக் கூட்டத்தைத்தான் தம் மனம்போன போக்கில் அழைக்கத் தலைப்பட்டனர் உண்மையறியா மக்கள்.

கதிரவனை நாம் வெறுங் கண்ணால் பார்க்கும்பொழுது, அது சந்திரனைப் போலன்றிக், களங்கமற்றதாகத் தோற்றுகிறது. ஆனால் புகையூட்டிய தொலைநோக்கு ஆடிமூலம்பார்த்தால், ஞாயிறு கோளத்தில் சில பாகங்களில் சிறு சிறு கறைகளைக் காணலாம். இக்கறைகளைத் தற்கால வான நூல் வளர்ச்சியின் தந்தை எனக் கருதப்படும் கலிலியோ, தாம் புதிதாக இயற்றிய தொலைநோக்கு ஆடியின் மூலம் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித்தார். இவைகள் கதிரவனின்நடுப்பாகமான ஒளிக் கோளத்திற்றோன்றி மறைகின்றன. ஒளிக்கோளமானது அதிக வெப்பமடைந்த காற்றுச்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

எந்தச் சாதிப் பெயர்களின் காரணமாகச் சமுதாயத்தில் பலர் வீழ்ச்சியுற்றார்களோ அதே சாதிப் பெயரின் காரணமாக அவர்களுக்கு மீட்சி தரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். இந்நாட்டில், சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்கள் சமதரை ஆகும் வரை, வகுப்புவாரி முறை அரசாங்கத்தால் கையாளப்பட்டே தீரவேண்டும்.

சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வு மனப்பான்மைகளைப்போக்கி, சமுதாயத்தைச் சீர்திருத்தும் பெரும்பணியைத்திராவிடர் கழகம் செய்துவருகிறது, அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு. திராவிடர் கழகம் சமுதாயம் முழுவதையும் சீர்திருத்தி வெற்றிக் கொடியை நாட்டும்போது, அரசாங்கம் வகுப்புவாரி முறையைக் கையாளவேண்டிய அவசியம் ஏற்படாது. வகுப்புக்களுக்கு ஏற்ற நீதி கிடைத்து, சமுதாயம் உயர்நிலையடையத் திராவிடர் கழகத்தின் தொண்டும், அரசாங்கத்தின் அணைப்பும் நாட்டிற்குத் தேவைப்படுகின்றன. எனவேதான், நாட்டிலுள்ள சாதிப்பாகுபாடுகள் அனைத்தும் ஒழிந்து, மக்கள் அனைவரும் சமுதாயத்துறையில் (பொருளாதாரத் துறையில் அல்ல) 'ஒன்றே குலம்' என்ற நிலை ஏற்படும் வரையில், இந்த வகுப்புவாரி முறை—அதாவது வகுப்புக்கு ஏற்ற நீதி வழங்கப்படவேண்டுமென்ற ஏற்பாடு இருந்தே தீரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

*

முன்பக்கத் தொடர்ச்சி

செறிந்திருக்கும் வளையமாகும். இக்கறைகள் ஞாயிற்றுப் பிழம்பின் உட்பாகத்திலுள்ள அளவுக்கு மிஞ்சிய வெப்பத்தால் உண்டாக்கப்பட்ட காற்றுக்கள் மிகவேகமாக வெளியே வரும்போது, ஒளிக் கோளத்திலுண்டாக்கப்பட்ட கிண்ணம் போன்ற துளைகளாகும். இவைகளிற் சில 1,00,000 மைல் குறுக்களவுள்ளனவாயும், மாதக் கணக்கில் தோற்றமளித்துக் கொண்டிருப்பனவாயும் இருக்கும்.

1840 ஆண்டு தோன்றிய கறைகள் 18 மாதங்களாகத் தோற்றமளித்தனவாம். 1905ம் ஆண்டில் காணப்பட்ட கறையில் நாம் வாழும் உலகைப்போல் 40 உலகங்களை அடுத்தடுத்துப் பக்கத்தில் வைத்தாலும், அவ்வுலகங்கள் கறையின் மறு ஓரத்தை முட்டாமலிருந்திருக்கும் என்று அறுதியிடப்படுகிறது. இத்தகைய பெரிய கறைகள், கதிரவன் முகில்களால் மறைக்கப்படும் நேரத்தில், அல்லது புகையூட்டிய கண்ணாடியைக் கொண்டு பார்க்கும்போது இலகுவிற் புலப்படும்.

இக்கறைகள், அதாவது புள்ளிகள் சில ஆண்டுகளில் அதிகமாகவும், சில ஆண்டுகளில் குறைவாகவும் தோற்றுகின்றன. இவ்விதமான தோற்றங்கட்கு, ஓர் கால வரையறை உண்டாவென்பதையறியும் பொருட்டு, ஸக்குவாபீ என்னும் ஜெர்மன் நாட்டு விஞ்ஞானி நெடுங்காலமாக ஆராய்ச்சி செய்தார். 1852ம் ஆண்டில் இக்கறைகள் 11 ஆண்டுகட்கு ஒரு முறையே அதிகமாகத் தோற்றுகின்றன என்பதை நன்கு ஆராய்ந்து முடிவு செய்தார். இவரது விடா முயற்சிக்கும், ஊக்கத்திற்குமாக இவருக்கு அரசாங்க வானநூற் சங்கத்தாரால் தங்கப் பதக்கம் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

இக்கறைகள் கதிரவனின் நிரட்சரேகையில் அல்லது துருவங்களில் தோற்றுவது மிக அரிதாகும். கதிரவனுடைய நிரட்சரேகைக்கு இரு பக்கத்திலும் 35 பாகை வரையில் தோற்றி, 15 பாகை வரையும் அதிகரித்து, பின் 4 அல்லது 5 பாகை வரையிற் குறைந்துவிடும். இக்கறைகளை நாம் நாள்தோறும் பார்த்து வருவோமாகில், அவைகள் நாளுக்கு நாள் ஞாயிற்றுப் பிழம்பின் ஓரத்தை நோக்கிச் செல்வதாகத் தோற்றும். இவ்வாறு தோற்றுவதற்குக் காரணம் ஞாயிறு தனக்குத்தானே சுழலுவதேயாகும்.

இக்கறைகள் அதிக தொலைவிலிருப்பதால், நமது கண்களுக்குச் சிறியனவாகத்தோற்றினாலும், அதிகமாகத் தோற்றுங் காலங்களில் உலகில் பலவித நிகழ்ச்சிகள் நிகழ்கின்றனவென்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிந்தார்கள். கறைகளின் உட்பாகங்களில் ஏராளமான மின்சார ஆற்றலிருப்பதால், அவைகள் காந்த ஊசிகளையும், காந்தமூட்டப்பட்ட பொறிகளையும், அதிகம் ஆட்டிவைக்கின்றனவென்பதையும், வானொலிக் கம்பிகள் தடுக்கப்படுகின்றனவென்பதையும் லிக் வேதசாலையின் அதிபர் ஹேல் என்பவர் கண்டுபிடித்தார். இது மாத்திரமன்றி வடதுருவத்தில் வியப்படையத்தக்க பல நிற வெளிச்சங்கள் தோற்றுவதற்கும், உலகிலேற்படும் தட்பவெப்ப நிலை மாறுதல்களுக்கும் இக்கறைகளே காரணமென்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிந்து தெளிவுபடுத்தியுள்ளனர்.

குறுக்கே வெட்டப்பட்ட ஒரு மரத்தில், மத்தியிலிருந்து பல வட்டங்கள் ஒன்றையொன்று சூழ்ந்திருத்தலைப் பார்க்கலாம். ஒவ்வொரு வட்டமும் மரத்தின் ஒவ்வொரு ஆண்டு வளர்ச்சியைத் தெரிவிக்கும். இவ்வட்டங்கள் ஓரேவித அகலமின்றி யிருத்தலையும் காணலாம். வெப்பக் காலங்களில் மரங்கள் சிறு வளர்ச்சி யுடையதாகவும், மழைக் காலத்தில் அதிக வளர்ச்சி யுடையதாகவும் இருப்பதையே இவ்வட்டங்கள் தெரிவிக்கின்றன. கதிரவன் கறைகள் மிகவாகத் தோற்றும் ஒவ்வொரு 11-ம் ஆண்டிலும், வழக்கமாகப் பெய்வதைக் காட்டிலும் அதிக மழை பெய்வதால், மரவளர்ச்சியைக் காட்டும் வட்டங்களில் ஒவ்வொரு 11-ம் வட்டமும் வழக்கத்திலும் பெரிதாக வளர்ந்திருத்தலைக் கண்டு ஊகித்தறிந்து கொள்ளலாம்.

இவை மாத்திரமேயன்றி, பேதி, அம்மை முதலிய தொத்து நோய்களும், விலங்கு நோய்களும், பூகம்பங்களும் உண்டாவதற்கும், பட்சிகளின் சிறகுகளில் சில வர்ணங்கள் மாறுதலடைவதற்கும் இக்கறைகளும் காரணமாக விருக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிகின்றனர்.

அண்மையில் அதாவது சென்ற வாரத்தில் ஞாயிற்றினிடத்துத் தோற்றியிருக்கும் கறையின் காரணமாக, நம் நாட்டில், வானொலிக் கம்பிகள் தடுக்கப்பட்டு, ஒலி பரப்பில் கோளாறுகள் ஏற்பட்டதை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. வான நூலறிஞர்களின் கண்ணோட்டம், கதிரவன் கறைகள் பற்றிய மேலும் பல உண்மைகளை அறியும் பொருட்டு, ஓயாமல், ஆழ்ந்தாராய்ந்தவண்ணமிருக்கின்றது. ஆனால், இங்கு, இன்னும், பஞ்சாங்கத்தைக் கையில் வைத்துக்கொண்டு, கதிரவனுடைய தேருக்கு ஒற்றைச் சக்கரம் இருப்பதாகவும், அதனை ஏழு குதிரைகள் இழுத்துச் செல்வதாகவும் சொல்லி, மக்களின் அறிவை மங்கவைக்கும் வைதிகப் பழக்கம் இருக்கத்தான் செய்கிறது! வான் வெளியில் முகில் கூட்டங்களைப் பிளந்து கொண்டு செல்லும் வானவூர்தி (ஏரோப்பிளேன்) யில் பிரயாணம் செய்யும் நம்மவர் சிலர், இடியைக் கேட்டு, அஞ்சி, அது தம்மீது விழாதிருப்பதன் பொருட்டு, 'அர்ச்சுனா, அர்ச்சுனா' என்று அலறித் துடித்துக் கூறும் வழக்கம் இன்னும் இங்கு மாறவில்லை. அந்த அளவுக்கு அஞ்ஞான இருள் இங்கு சூழ்ந்து கொண்டு இருக்கிறது. சூரிய கிரகணம் எதனால் உண்டாகிறதென்பதை விஞ்ஞான முறையில் மாணவர்களுக்குப் போதிக்கும் கல்லூரி ஆசிரியர், சூரிய கிரகணத்தன்று, 'சமுத்ர ஸ்நானம்' செய்யும் பழக்கத்தைக் கைவிட அஞ்சுகிறார் என்றால், அஞ்ஞானம் இங்கு எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறதென்பது விளங்கும்!

சென்னையில்

C. N. அண்ணாத்துரை

K. R. இராமசாமி

நடிக்கும்

"சந்திர மோகன்"

நாடகத்தை

அடுத்தவாரம் எதிர்பாருங்கள்!

இடம், தேதி விரைவில்

அறிவிக்கப்படும்

ஒரு காலிநாற்காலி

4-ம் பக்கத் தொடர்ச்சி

தேடின. உள்ளே வரும்படி கண்ணை அசைத்தார் சுந்தரம் பிள்ளை. சூடாமணி மேடையில் நுழைந்தாள்.

மேடையில்எரிந்த பிரகாசவிளக்குகள், அருகிலிருந்த வாத்தியக்காரர்கள், முதல் வரிசையிலிருந்த நடிக நட்சத்திரங்கள், பின்னால் பரவியிருந்த கூட்டம் எல்லாம் சிறிது நேரத்தில் மங்கி மறைந்துவிட்டன. மேடையில் நடிக்கிறோம் என்பதும் மறைந்து, நாடகத்தில் கலந்துவிட்டாள் சூடாமணி.

ஒவ்வொன்றாகத் திரைகள் அவிழ்ந்து, சுருண்டு, மாறின. கதை வேகமாக ஓடியது. மக்கள் கண்முன் மற்றவர்கள் மறைந்துவிட்டனர். சூடாமணியின் தோற்றமே முன் நின்றது. அவளுடைய வருகையை ஆவலுடன்எதிர்பார்த்தனர், மேடையிலிருந்து போகும்பொழுது அவளையே பின்பற்றினர். கண்களனைத்தும் அவள் பார்க்கும் திக்கையே பார்த்தன. அவளுடைய கைவளையல் அசைவது கூடக் காதில் விழுந்தது. அவள் பேசியவை புதிய சொற்களல்ல, ஒவ்வொருவரும் அடிக்கடி கேட்டிருப்பதுதான். ஆனால் அவற்றை அவள் சொல்வதில் புதுமையிருந்தது. மகிழ்ச்சியும், மனநெகிழ்ச்சியும், சோகமும், கோபமும் அவற்றில் கலந்துவந்தன. கடைசிக் கட்டத்தில், அலைந்து வாழ்க்கையில் மனமுடைந்த அந்தப்பெண் இறக்குந் தருவாயில் "நானோர் ஏழைப் பெண், வாழ்விலே ஒரு தோல்வி, எனினும் வாழ்ந்துவிட்டேன்" என்று தன் பேச்சும் கடைசி மூச்சும் தடுமாறச் சொன்னபொழுது கூட்டத்தில் அசைவில்லை, மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொருவரும் கேட்டனர். இறக்கும் சொற்களில் தான் எவ்வளவு கனிவு, வலிமை! அமைதியான நீர்த்தளத்தில் வீசப்பட்ட கற்களைப்போல, இருதயங்களில் மோதிக் கண்களில் அலைகளைப் புரளச்செய்தது. சுந்தரம் பிள்ளைக்குப் பக்கத்திலிருந்தவர் கைக்குட்டையை வாயில் வைத்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். கன்னங்களில் நீர் வழிந்தோடியது. பக்கத்திலிருப்பவர் கவனித்ததைக் கண்டு வெட்கமடைந்தவராய் அதைத் துடைத்தவண்ணம் "எனக்கு ஒரு மகள் இருந்தாள், இரண்டு வருஷத்துக்குமுன் இறந்துவிட்டாள்" என்று சமாதானம் சொன்னார்.

நாடகம் முடிந்ததும் தலைவர் மேடையில் வந்து அமர்ந்தார். அங்கு வந்திருந்த பிரபல சினிமா நடிகர்களையும் பார்க்கவேண்டுமென்று மக்கள் கூச்சல் போட்டதால், அவர்களும் மேடைக்கு அழைத்துவரப் பட்டனர். தலைவருக்கும் மற்றவர்களுக்கும் மாலையணிந்துவந்த மானேஜர், நடிகைகளுக்கு மாலை போடுவதற்குச் சூடாமணியைக் கூப்பிட்டார். இன்னும் வேஷங்கூட கலைக்காமல், அவள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். "பரவாயில்லை, சீக்கிரம்போ" என்று மலர்மாலைகளைக் கொடுத்தார். பிரபல நடிகைகளுக்கு மாலையணிவிக்கும் பெருமை தனக்குக்கிடைத்ததைப்பற்றி சூடாமணி களிப்படைந்தாள். உவகையுடன், மிகப் பணிவுடன் கமலகுமாரி, காந்தாமணி, சுந்தரி, கலாவதி முதலியவர்களுக்கு மாலைகளை அணிந்தாள். நடிகைகள் ஒவ்வொருவரும் மாலைகளை ஏற்றுக்கொள்ளும் பொழுது மக்கள் கைதட்டினார்கள். கடைசியில் தன் வேலை முடிந்ததும், போவதற்குத் திரும்பினாள் சூடாமணி. அதுவரை மற்றவர்களின்மீது இருந்த கவனம், இன்னும் வேடத்தைக்கலைக்காத சூடாமணி பக்கம் திரும்பியது. இவள்தான் சற்றுமுன் நடித்தவள்! பெருத்த ஆரவாரம் கிளம்பியது, நீடித்தது, பின் அலைபோல ஓய்ந்து, திரண்டு, அதிகரித்தது. மலர்மாலைகளை அணிந்த சினிமா நடிகைகள்—நடிப்பின் அரசபரம்பரையினர் பின்னால் உட்கார்ந்திருந்தனர், சலிப்புடன். பொறுமையுடன் முன்னால் வெறுங்கையுடன், ஏழையுடையில் நின்ற சூடாமணி திகைத்துவிட்டாள். சந்தேகமில்லை. நீண்ட ஆரவாரம் அவளை நோக்கித்தான் அடித்தது. நாடகநேரத்தில் தங்கள் கைதட்டுதலையும், ஆரவாரத்தையும் மக்கள் மறந்திருந்தனர், அவளுடைய நடிப்பில் மயங்கியிருந்ததால். இப்பொழுது அதை வெளிப்படுத்தும் நேரம் வந்தது. முழு நாடகத்தின் போதும் அடக்கிவைத்திருந்த ஆரவாரத்தையும் ஒருங்கே கொட்டினர். பிரபல நட்சத்திரங்கள் கோபத்துடன் மேடையிலிருந்து இறங்கிப்போவதைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை. சுந்தரம்பிள்ளை வெற்றிப் புன்னகையுடன் அவர்களைப் பார்த்தார். இவ்வளவு அமளியிலும் கதையாசிரியர் கந்தப்பன் தன்னிடத்தில் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்.

முதல் நாள் நாடகத்தைப் பற்றிய விமரிசனங்கள் காலைப் பத்திரிகைகளில் இருந்தன. விளம்பரங்களில் நாடகப் பெயருக்கு முன் சூடாமணியின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. சினிமாவில் அவளுடன் சில்லரை பாகங்களில் நடித்தவர்கள் காண வந்தார்கள், தயக்கத்துடன். சுந்தரம் பிள்ளையுடன் பேசிக்கொண்டிருந்த இரண்டு படமுதலாளிகள்—சூடாமணி நம் படத்தில் இதற்கு முன் நடித்திருக்கிறதே என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டனர். மாலை மூன்று மணிக்கெல்லாம் டிக்கட்டுகள் தீர்ந்துவிட்டன. அந்தக் கம்பெனியின் சரித்திரத்திலேயே அதிசய சம்பவமாக "டிக்கட் இல்லை" என்ற போர்டு எழுதப்பட்டு வாயலில் வைக்கப்பட்டிருந்தது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன் ஒரே கூச்சலும், சந்தடியும் இருந்தன. "இவ்வளவு கலவரமிருந்தால் நாடகம் எப்படி நடத்தமுடியும்" என்றாள் சூடாமணி. சுந்தரம் சிரித்தார். நாடகம் ஆரம்பித்ததும் அடங்கிவிடும். கொட்டகைக்குள்ளிருப்பவர்கள் நாடகம் ஆரம்பிக்கவில்லையே என்று ஆத்திரப்படுகின்றனர். வெளியிலிருப்பவர்களுக்கு டிக்கட்கிடைக்கவில்லையே என்று கோபம். இரண்டு பேருக்கும் நாடகம் பார்க்கவேண்டுமென்ற ஆசைதான். அதிலும் புதிய நட்சத்திரம் காட்சியளிக்கிறதென்றால்.............."

"போங்க, அப்பா! உங்களுக்கு இன்றைக்கு முழுவதும்கேலிதான்!"

"என்னவோ மேடையில் நட்சத்திரமானதும் கீழே இருட்டில் உட்கார்ந்திருப்பவர்களை மறந்துவிடாதே"

நாடகத்தின் முதல் மணி அடித்தது. "நம் இடத்தை யாராவது பிடித்துக்கொள்ளப் போகிறார்கள்." என்று சுந்தரம்பிள்ளை எழுந்தார். வேடமணிந்துகொள்ள சூடாமணி உள்ளே போனாள். போகும்பொழுது

வேடமணிந்துகொண்டிருந்த மற்றவர்கள் தன்னை உற்றுப் பார்ப்பதை அவள் உணராமலில்லை.

சூடாமணி கண்ணுக்கு மை தீட்டிக் கொண்டிருந்தாள். முதலில் பாடிய கோரஸ்பாட்டு வாயில் முணுமுணுத்தது, அப்பொழுது சுந்தரம் பிள்ளை உள்ளே நுழைந்தார், இரண்டு போலீஸ்காரர்கள் பின் தொடர.

"கலவரம் ஏதாவது நிகழ்கிறதா?"

"ஒன்றுமில்லை, என்னை அழைத்துப்போக" என்றார் சுந்தரம்பிள்ளை.

"உங்களையா, ஏனப்பா?" என்று அருகில் ஓடிவந்தாள்.

"சற்று நேரம் வெளியில் இருங்கள். நான் ஓடிவிடமாட்டேன்," என்று போலீஸ்காரர்களை அனுப்பிவிட்டு சுந்தரம்பிள்ளை நடந்ததைச் சொன்னார். "முதலாளி கணக்கிலிருந்து பணத்தை எடுத்துச் செலவு செய்தேன். மோசடிக் குற்றத்திற்காகப் போலீசை அனுப்பிவிட்டார்."

"அப்படி இருக்காது, எவ்வளவு பணம்?"

"பதினாயிரம்ரூபாய்க்குமேல்.இந்த நாடகத்துக்காகச் செலவழிந்தது. எடுத்தது மோசடிதான். பணத்தைத் திரும்பவும் போட்டுவிடலாமென்றிருந்தேன், கமலகுமாரி முதலியவர்கள் தூண்டிவிட்டிருக்கிறார்கள். பணம் கூட இப்பொழுது தேவையில்லை. என்னை எப்படியாவது அவமானப் படுத்தி, நாடகத்தைச் சீர்குலைக்க வேண்டுமென்பதுதான் அவளுடைய முயற்சி. ஏனென்றால் நேற்று வேண்டுமென்றே அவள் அவமானப்படுத்தப்பட்டதாக நினைக்கிறாள்."

"ஐயோ இந்த நாடகத்துக்காக—எனக்காக நீங்கள் ஏன் ஆபத்தில் சிக்கிக்கொண்டீர்கள்? மோசடி, போலீஸ், அவமானம் அப்பா! உங்கள் வார்த்தை என் மனத்தைச் சுட்டு எரிக்கிறதே!" என்று சூடாமணி தேம்பியழுதாள்.

"சூடா, வீணாகக் கண்ணீரைச் சிந்தாதே. நடிகர்களின் கண்ணீருக்கு நாட்டில் மதிப்புக் கிடையாது. அதையும் நடிப்பு என்றுதான் சொல்வார்கள். அந்தக் கண்ணீரின் ஏழ்மையும் வேதனையும எனக்குத் தெரியும், நானும் நடிகனாயிருந்ததால். மதுரை பாலமதுரகான சபையில் ஒரு பிரபல நடிகனின் அபார நடிப்பு உன் வாழ்வையே ஆட்டிவிட்டது என்று சொன்னாயே, அந்த துர்ப்பாக்கிய நடிகன் வேறு யாருமில்லை, நான்தான். ஆச்சரியமடையாதே. நம்முடைய புகழையும், நடிப்பையும் கண்டு ஆச்சரியமடைகிறவர்களுக்கு நாம் படுகிற அவதிகள் தெரியாது. அப்பொழுது நான்—என் பெயர் சுந்தரநாதன், பெயருக்கேற்ற சுந்தரமான தோற்றம் இருந்தது. நாடகமேடைத் திலகமாகத் திகழ்ந்தேன். அந்த ஒளியின் வெம்மையே என்னைக் கருக்கிவிட்டது. ஓயாத உழைப்பும் வசதியற்ற வாழ்வும் என்னை உருக்குலைத்துவிட்டன. சுந்தரமான மேனியை இழந்தேன், ஒளி வீசும் கண்கள் மங்கின, குரலில் தவழ்ந்த இனிமை கரைந்தது. அம்மை நோய்வாய்ப்பட்டு முகத்தில் தழும்புகள் தங்கின. பத்து ஆண்டு வாழ்வில இருபது வயது முதுமை என் உடலில ஏறியது. ஆனால் அதற்காக நான் வருந்தவில்லை. மற்றவர்கள் நூறாண்டு வாழ்வதைப் பத்து ஆண்டுகளில் கழித்துவிட்டேன். அன்றைக்கு உன் கதையைக் கேட்டதும் தான் நாடகம்—நடிப்பு என்ற வெறியில் எவ்வளவு பலி கொடுக்கிறோம் என்பது தெரிந்தது. பெற்றோரின் அன்பு, உற்றார் உறவினரின் ஆதரவு, நம்முடைய இளமை, எழில், வசதியான வாழ்வு, அமைதியான இல்லம் இவ்வளவையும் ஈடு கொடுத்த பிறகுதான் நாடகத்தில் நிற்க முடிகிறது. இவ்வளவு துன்பங்களை ஏற்ற பின் நமக்குக் கிடைப்பது தியாகி என்ற பட்டமா? சே! கூத்தாடி என்ற இழிசொல்! நம்முடைய மங்கிய வாழ்வினால் நாடகம் ஒளி வீசுகிறது, வளர்கிறது நம் கண்ணீரால், உலவுகிறது நம் பெருமூச்சினால். சுந்தரநாதன் உயர்தர நடிகன்—அது மறைந்தது. இன்று வரை சுந்தரம் யோக்கியமானவன், நாணயமுள்ளவன் என்ற பெயர் இருந்தது. அந்த நாணயத்தையும் இன்று அழித்துவிட்டேன். அவ்வளவுதான் என்னால் முடிந்தது."

சூடாவின்முகம் சிவந்துவிட்டது. கண்கள் நீரை உகுத்தவண்ணமிருந்தன. முகத்தை அழித்துக்கொண்டு, தலைமயிரை அவிழ்த்தாள் சூடாமணி.

"சூடா, வேஷத்தை ஏன் கலைக்கிறாய்?"

சூடாமணியால் பேசக்கூட முடியவில்லை. "நீங்கள் போன பிறகு நாடகம், நடிப்பு, வேஷம் எல்லாம் எதற்காக? உலகமே திரண்டு வந்தாலும் நான் இனி நடிக்கப் போவதில்லை. ஒரு நாள் நடித்ததற்குக் கிடைத்த பலன் போதும்."

"சூடா, நீ அவ்வாறு செய்தால் என்னைச் சிறைக்கு அனுப்புபவர்களுக்கு முழு வெற்றி கிடைத்துவிடுகிறது. நான் எடுத்த பணம் பெரிதல்ல. இப்பொழுதுள்ள ஸ்டுடியோ முதலாளிதான் என்னுடைய நாடகக் கம்பெனியின் சொந்தக்காரராயிருந்தவர். என்னுடைய நாடகங்களில் இதைப்போல் பத்துப் பங்கு பணம் சம்பாதித்திருப்பார். இப்பொழுது மற்றவர்களின் தூண்டுதலின் பேரில் அவ்வாறு செய்திருக்கிறார். என்னை அகற்றுவதனால் நாடகத்துக்கும் உன்னுடைய நடிப்புக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பார்க்கிறார்கள். நான் சிறைக்குப் போனாலும் நாடகம் நின்றுவிடக் கூடாது."

"அப்பா, நீங்கள் சிறையில் வாடும் பொழுது நான் இங்கு எப்படி உல்லாசமாக இருக்க முடியும்?"

"சிறைக்குச் சென்றால் என்ன? ஐந்துவருடத் தண்டனை, பின்வந்துவிடுவேன். ஆனால் நான் சென்றதும் நாடகம் நடைபெறவில்லை, சூடா நடிக்கவில்லை, என் முயற்சிகளனைத்தும் சீரழிந்தன என்ற செய்தியைக் கேள்விப்பட்டால்அதைவிடப்பெரிய தண்டனை எனக்கு வேறெதுவும் கிடையாது. பணத்தாலும் பொறாமையாலும்தண்டிக்கப்படுகிறஎனக்கு நீ ஆதரவாயிருப்பாயா? அல்லது பொறாமைக்காரர்களுக்குவெற்றியளிப்பாயா?"

* * *

ஆறாவது சீன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. "சூடா! அழாதே இங்கேவா!" என்று கண்களைத் துடைத்தார்.

ஏழாவது சீன் ஆரம்பமாயிற்று. சூடாமணியை அணைத்துக்கொண்டு

(3-ம் பக்கம் பார்க்க)

அசுர குணம் வளரட்டும்

இப்போது சென்னை மாகாணத்தில் இருப்பவர்கள் எல்லோரும், சட்டப்படி அசுரர்களாகிவிட்டனர். அதாவது, சென்னை அரசாங்கம் இம்மாகாணத்தில் மது விலக்கை நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டது. எனவே இங்குள்ள அனைவரும் அசுரர்களாகிவிட்டனர். அதனுல் இப்போது நாட்டில் அசுரகுணம் தோன்றிவருகிறது. மாகாணத்தில் மதுவிலக்கு ஏற்படுவதற்கு முன் பலர் சுர குணம் படைத்தவர்களாக இருந்தார்கள். அதாவது மது உண்ணும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். இப்போது சட்டப்படி யாருமே மது உண்ணக்கூடாதென்ற நிலை பிறந்துவிட்டது. எனவேதான் எல்லோரும் அசுரர்களாகிவிட்டனர் என்றும், அதனுல் அசுரகுணம் தோன்றி வருகிறதென்றும் கூறுகின்றோம்.

மதுவை ஒரு அரக்கன் என்றும், அதனை அருந்துபவர்களை அசுரர்கள் — அரக்கர்கள் — இராட்சதர்கள் என்றும் கூறுவதைவிட்டு, மது உண்ணுதவர்களையே அசுரர்கள் என்று கூறப்படுவதைக் கண்டு அன்பர்கள் ஆச்சரியப்படலாம். ஆனுல், உண்மையில், மது அருந்தாதவர்கள் தான் அசுரர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. சொற்களுக்குப் பொருளை விளக்கும் அகராதியில் இந்த உண்மை கூறப்பட்டிருக்கிறது. அதாவது, 'சுரர்' என்ற சொல்லுக்கு மது உண்பவர்கள் என்ற பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பிரமனுடைய கட்டளையின்படி மதுவருந்திய அனைவரும் சுரர் என்று அழைக்கப்பட்டனர் என்பதாக அந்த அகராதியிலேயே விளக்கமும் தரப்பட்டிருத்கிறது. எனவே, மது உண்பார் அனைவரும் சுரர் என்றழைக்கப்பட்டால், மதுவருந்தார் அனைவரும் சுரர்களுக்குப் புறம்பான அல்லது அவர்களின் விரோதிகளான அசுரர்கள் என்று தானே அழைக்கப்படுவர். அசுரர் என்ற சொல்லுக்கும் அந்த அகராதியில் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதாவது அசுரர் என்றுல் சுரருக்கு விரோதிகள், அதாவது மது உண்பவர்களுக்கு விரோதிகள் என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது. எனவேதான், நம்முடைய மாகாணத்திலுள்ள அனைவரும் இப்போது அசுரர்களாகிவிட்டனர், அதாவது சட்டப்படி மதுவுண்ணுதவர்களாகி விட்டனர் என்று கூறினும். மதுவருந்தாத நிலை ஏற்பட்ட காரணத்தால் அவர்களுக்கு அசுர குணம் தோன்றத் தொடங்கிவிட்டதென்றும் குறிப்பிட்டோம்.

சென்னை அரசாங்கம் சட்ட வாயிலாகமதுவிலக்குச் செய்தபோதிலும், இன்னுஞ் சிலர் திருட்டுத்தனமாக மதுவருந்தும் மதிகெட்ட செயலைத் தொடர்ந்து செய்வதையும், அதற்காகத் தண்டிக்கப்படுவதையும் காண்கின்றோம். அரசாங்கம் இன்னும் தக்க நடவடிக்கைகள் எடுத்து இந்த மதுவருந்தும் மதியீனச் செயலை அறவே ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதே எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். அதாவது, அரசாங்கத்தின் கண்களுக்கு அகப்படாமல் ஆங்காங்கு மறைந்து கிடந்து மதுவருந்தும் சுரர்களை எல்லாம் அசுரராகும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

3—6—49—ல் சிதம்பரத்தில் நடைபெற்ற சேக்கிழாரின் மூன்றுவது ஆண்டுவிழாவில் கலந்து சொற்பொழிவாற்றிய அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் ரிஜிஸ்ட்ராராகஇருக்கும் தோழர் சச்சிதானந்தம் அவர்கள்,

> "நாட்டில் தற்சமயம் புராணங்கள் பொய் என்று கூறும் புரட்சியும், அசுர குணங்களும் தோன்றி வருகின்றன"

என்று பேசியுள்ளார். சென்னை அரசாங்கம் செய்துள்ள மதுவிலக்கானது, உண்மையிலேயே நாட்டிலுள்ள அனைவருக்கும் மதுவுண்ணுமையாகிய அசுரகுணம் ஏற்பட வேண்டுமென்பதுதான். ஆனுல், தோழர் சச்சிதானந்தம் அவர்கள், மக்களுக்கு அசுரகுணம், அதாவது மதுவருந்தாத நல்லகுணம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டுமென்று கூறுகிருர். அசுர குணம் நாட்டில் தோன்றி வருவதால்,

> "சமயம் பாழ்பட்டு வருகின்றது"

என்றும் கூறுகிருர். மதுவருந்தும் பழக்கத்தை மேற்கொண்ட சுரர்கள், தங்கள் மதியீனத்தால் மக்களுக்குப் பயன்படாத மதத்தையும் அதற்குரிய கோட்பாடுகளையும் உண்டாக்கி வைத்தது மாபெருந் தவறு என்பதை, மதுவருந்தும் கொடிய பழக்கத்தைவிட்டு மதிபெற்ற மக்கள் உணர்ந்து, மதக்கோட்பாடுகளை மக்களுக்குப் புகுத்தும் புராணங்களைப் பொய்யென்றும், அவை ஒழிக்கப்படவேண்டுமென்றும், கூறுகின்றனர்—தோழர் சச்சிதானந்தம் போன்றுரின் கூற்றுப்படி புராண ஒழிப்புப் புரட்சி செய்கின்றனர். இது எப்படித் தவருகும் என்பது தான் நமக்குப் புரியவில்லை.

சென்னை அரசாங்கம் எவ்வளவோ பாடுபட்டுப், பல கோடி ரூபாய் வருவாயையும் இழந்து, நாட்டுக்குச் செய்யவேண்டிய நல்ல காரியம் இது என்பதை உணர்ந்து, மதுவிலக்கைக் கொண்டுவருவதன் வாயிலாக மக்கள் அனைவரையும் நல்லவர்களாக அதாவது அசுரர்களாக ஆக்கவேண்டுமென்ற ஓர் சிறந்த காரியத்தைச் செய்திருக்கும் போது, அதனைத் தவறென்று மக்கள் கருதும் முறையில் தோழர் சச்சிதானந்தம் அவர்கள் போன்ருர், மக்களை மீண்டும் சுரர்களாக்கும், அதாவது மதுவருந்துபவர்களாக்கி அவர்களின் மதியை இழக்கச் செய்யும் போக்கில் பிரசாரம் செய்துவருவது உண்மையிலேயே வருந்தத் தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும்!

புராணங்களுக்கு ஆக்கமும் ஆதர

வும் தேடுவதற்கு வழி, மக்கள் அனைவரும் சுரர்களாக இருக்கவேண்டியதுதான் என்ருல், சென்னை அரசாங்கத்தார் செய்துள்ள மதுவிலக்கைத் தோழர் சச்சிதானந்தம் போன்ருர் மறைமுகமாகக் கண்டிக்கிருர்கள் என்ற ஐயப்பாடு யாருக்குத்தான் உண்டாகாமல் இருக்க முடியும்!

உலகியல் அறிவைப்பெற்று, முன்னேற்றப் பாதையில் சென்று, நாட்டுக்கு நலம் புரியவேண்டிய மாணவர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் அளவுக்குத் தம்முடைய நிலையை உயர்த்திக்கொண்ட தோழர் சச்சிதானந்தம் அவர்கள், 'சுரர்' 'அசுரர்' என்ற சொற்களுக்குரிய பொருளை அறிந்துகொள்ளும் ஆற்றலைப்பெற்றவராக இல்லையென்பதற்காக நாம் அவர்பால் வருத்தப்படாவிட்டாலும், ஆரம்பப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு விளங்காத சொற்களை அகராதியில் பார்த்து அவற்றின் பொருள்களைத் தெரிந்துகொள்ளும் சாதாரண அறிவைக் கூடப் பெருதவராகக் காணப்படுகிருரே என்பதற்காக அவர்பால் இரக்கமும் வருத்தமும் கொள்ள வேண்டியே இருக்கிறது. தமிழ் அகராதியையோ அல்லது சொற்களுக்கு விளக்கங்கூறும் 'அபிதானசிந்தாமணி' என்ற புத்தகத்தையோ பார்த்தால், 'சுரர்' என்பதற்கு மது உண்பவர்கள் என்றும், 'அசுரர்' என்பதற்கு மது உண்பவர்களுக்கு விரோதிகள் என்றும் பொருள் தரப்பட்டிருப்பது தெளிவாகத்தெரியும்.

அன்பர் சச்சிதானந்தம் அவர்கள் இப்போது, புராணங்களை எதிர்ப்பவர்களுக்கு அசுரப்பட்டத்தை அளிக்கிருர் என்ருல், அதற்குக் காரணம், புராண இதிகாசங்களில் அசுரர் என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தவருன விளக்கத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் இவ்விதம் கூறுகிருர் போலும்! ஒரு சொல்லுக்குரிய பொருள் இன்னதென்பதை அறிந்து கொள்வதற்கு அதற்கென இருக்கும் அகராதியல்ல—புராண இதிகாசங்கள்தான் ஆதாரம் என்று அவர் கருதுவாராருல், புராண இதிகாசாதிகளில் கூறப்பட்டிருக்கும் அசுர குணத்தை விளக்கவும் நாம் தயாராய் இருக்கிருேம். ஆனல், அசுர குணம் எது? சுரகுணம் எது? என்பது முதலில் உணரப்பட வேண்டும். புராணக்கூற்றின்படி சுரராகவும், அகராதியின்படி அசுரராகவும் கருதப்படும் ஆழ்வார்கள் நாயன்மார்கள் பலர், மதுவிலக்கு ஏற்படாத காலத்தில் நடத்திய திருவிளையாடல்கள் பல நமக்குத் தெரியும். தான் பெற்ற குழந்தையைப் பாண்டம் செய்வதற்காகப் பிசைந்த மண்ணேடு சேர்த்து பிசைந்து கொன்ற கோராகும்பர் கதையும், தன்னுடைய மனைவியைப் பிறன் ஒருவனேடு அனுப்பிய இயற்பகையின் கதையும், இன்னும் இது போன்ற பல அறிவுக்கும் இயற்கைக்கும் புறம்பான கதைகள் பல புராணங்களில் இருப்பது நமக்குத் தெரியும்.

இப்படிப்பட்ட ஆபாச புராணங்களை ஒழிக்க முற்படுபவர்களை அசுர குணம் படைத்தவர்கள் என்று அன்பர் சச்சிதானந்தம் போன்ருர் கூறுகின்றனர் என்ருல், அவரைச் சுரர் பட்டியில் சேர்த்து, அவர் கூறுவதை நாம் முழு மனதுடன் வரவேற்கிருேம், நாம் உண்மையாகவே மதுவருந்தி, மதியை இழந்து மன்பதைக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்ய முயலாத அசுரர்கள் என்ற காரணத்தால்.

எனவேதான், நாட்டில் அசுர குணம் வளரவேண்டும்—சுர குணம் மறையவேண்டும்—சுர குணத்தால் ஏற்பட்ட மது மயக்கத்தோடு, மத மயக்கமும் சேர்ந்து மன்பதையைப் பாழாக்கும் நிலை மாறவேண்டும் என்று கூறுகின்ருேம்.

நம்முடைய நாட்டில் புராணங்கள் ஏற்படுத்திய இயற்பகைகளும், கோராகும்பர்களும், கோட்புலிகளும், செருத்துணைகளும் இவர் போன்ற பிறரும் வேறு நாடுகளிலும் ஏற்படவேண்டுமென்பதற்காக, இப்படிப்பட்ட புராணங்கள் எல்லாம் வேறு பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்று தோழர் சச்சிதானந்தம் அவர்கள் இங்குள்ள செல்வர்களையும் அறிஞர்களையும் கேட்டுக்கொள்கிருர் என்ருல், அவருடைய அறிவு எந்த அளவுக்கு 'வளர்ச்சி' அடைந்திருக்கிறதென்பதை இன்றைய விழிப்படைந்த உலகம் உணர்வதற்கு ஓர் நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பது நன்கு புலனுகின்றது. மூக்கை அறுத்தவன், நாக்கைத் துண்டித்தவன், பெற்றபிள்ளையைக் கொன்றவன், பச்சிளங் குழந்தையை ஆகாயத்தில் வீசியெறிந்து அது கீழே வரும்போது இரு துண்டாக வெட்டி வீழ்த்தியவன், தந்தையின் காலை வெட்டியவன், மனைவியைக் கொன்றவன், கண்ணை இடந்து கல்லுக்கு அப்பியவன், திருடியவன், சூதாடியவன், பெற்ற பிள்ளையைக் கொன்று கறிசமைத்தவன், கையைச் சந்தனக் கட்டையென்று நினைத்துக் கொண்டு கல்லில் தேய்த்தவன், மனைவியின் தாலியை விற்று மகேசுர பூசை செய்தவன், தாயைப்புணர்ந்து தந்தையைக் கொன்றவன் என்ற இன்ன பிற 'பேரறிவாளர்'களின் சரித்திரங்களைக் கூறும் புராணங்களைத்தான் பலமொழிகளில் மொழிபெயர்த்து உலகெங்கும் பரப்ப வேண்டுமென்று தோழர் சச்சிதானந்தம் உபதேசம் செய்கிருர்—சுர குணம் நாடெங்கும் பரவவேண்டுமென்று விரும்புகிருர் — அசுர குணம் அழிய வேண்டுமென்று ஆசைப்படுகிருர். ஆனல், நாம் அசுர குணம் வளரவேண்டும்—சுர குணம் மறைய வேண்டுமென்று கூறுகின்ருேம். எது வேண்டும்? மதுவருந்தி மதியை இழக்கும் சுர குணமா? அல்லது மதுவருந்தாது மதியை வளர்த்து மன்பதைக்கு நன்மை செய்யும் அசுர குணமா? கூறுங்கள்!

உயர்நிலைப் பள்ளித் தோற்றம்

காஞ்சிபுரம் தாலுக்காவைச் சேர்ந்த பெருநகர் கிராமத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி, 20—6—49-ம் நாள் முதல் தொடங்கப் பெறுகிறது. பெருநகருக்கு அடுத்துள்ள கிராமங்களில் வாழும் பெற்ருேர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க இஃதோர் நல்வாய்ப்பு. பயன் படுத்திக் கொள்வார்களாக!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.